
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஜுலை - 1981
ஆடி



ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய வழியில் மத உண்மைகளை இந்த மாதப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ. 12
ஆயுள் சந்தா	ரூ. 150
தனிப் பிரதி	ரூ. 1-20

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 15 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம்.

வருட சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதன் மூலம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவி புரியக் கோருகிறோம். ஆயுள் சந்தா என்பது 35 ஆண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் என்பதை குறிக்கிறது.

<u>வேண்டுகோள்</u>

1. மக்களுக்கு உணவு உடை வழங்கி உடல் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் நல்ல உதவி ஆகிறது. கல்வி, தொழில் முதலியவற்றைக் கற்பித்து ஜீவனோபாயத்திற்கு வழிவகுத்துத் தருவது அதனினும் மேலான சேவை ஆகிறது. ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படித்தும் கேட்டும் ஆத்மசாதனங்களில் ஈடுபடச் செய்வது தலையாய கைங்கரியமாகிறது. தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் ஞானதானம் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது நமக்கும் மற்றவர்களுக்கும் பெருநலன் தரும்.

2. அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கரியமாக கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. அன்பர்கள் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள் தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

தொலைபேசி :
7 1 2 3 1

விவரங்களுக்கு :
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

ஸ்ரீ

ஹிந்து ஒற்றுமை மையம்

37, ஆராவமுது தோட்டத் தெரு,

எழும்பூர், சென்னை - 600 008.

மதமாற்றத்தைத் தடுக்க தொண்டர்களாகச் சேர்வீர்

திரு. வி. ரங்கசாமித் தேவர் (மாநிலத் தலைவர், ஆர். எஸ். எஸ்.), திரு. எஸ். வேதாந்தம் (மாநிலச் செயலாளர், விஸ்வ ஹிந்து பரிஷத்), திரு. எம். ராமசாமி (மாநிலத் தலைவர், ஹிந்து ஆலயப் பாதுகாப்புக்குழு), திரு. இராம. கோபாலன் (மாநில அமைப்பாளர், ஹிந்து முன்னணி) மற்றும் திரு. நாராயணன் (செயலாளர், ஆர்ய சமாஜம்) ஆகியோர் கீழ்க்காணும் கூட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளனர் :—

தீண்டாமை ஹிந்து சமுதாயத்துக்கு மாபெரும் களங்கம். கடந்த பல நூற்றுண்டுகளாக மகான்கள் பலர் இதனை ஒழிக்கப் பாடுபட்டு வந்துள்ளனர். காந்திஜி, அம்பேத்கார், சாவர்க்கர் போன்ற பெரியோர்கள் அண்மைக் காலத்தில் இதனை அகற்றப் பெருமுயற்சியில் ஈடுபட்டனர். சட்ட மூலம் அரசு இதனைத் தடை செய்துவிட்டது. ஆனுல் ஹிந்து சமுதாயம் முழுமையுமே இதனைத் தனது சொந்தப் பணியாக ஏற்காதவரை வெற்றி கிடைப்பது கடினம்.

தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் ஜாதிகளுக்கிடையே சண்டைகளும், ஒட்டு மொத்த மதமாற்றங்களும் திடீரெனப் பெருகி வந்துள்ளன. அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். தகவலறிந்து நாங்கள் திருநெல்வேலி மாவட்டம் மீனுட்சிபுரத்திற்கும், மதுரை மாவட்டம் குராயூருக்கும், ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், ராமனுதபுரம் ஆகிய ஊர்களுக்கும் தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டைக்கும் சென்றுவந்தோம். பாதிக்கப்பட்ட இடங்களில் ஆய்வு நடத்தினேம். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக உடனடியான வழிமுறைகளைக் காண்பது அத்தியாவசியம் என்று உணர்ந்தோம்.

ஹிந்து இயக்கங்களின் சக்திகள் ஒருமுனைப்பட்டு ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்காக ஒரே மையத்தில் அனைவரும் இணைவது நல்லது என்று யோசனை கூறப்பட்டது. ஆகவே 'ஹிந்து ஒற்றுமை மையம்' என்ற இயக்கம் ஒன்றினை நிறுவி அதில் ஒத்த கருத்துள்ள தனி நபர்களையும் இயக்கங்களையும் இணையுமாறு கோரவேண்டுமென ஆலோசனை அளிக்கப்பட்டது.

முதற்படியாக மதிப்புக்குரிய நமது சமயத் தலைவர்களின் ஆசிகளைப் பெறமுனைந்தோம். தருமபுரம் ஆதின கருமகா சன்னிதானம், மதுரை ஆதீனகர்த்தர், காஞ்சி காமகோடி சங்கராசார்ய சுவாமிகள் ஆகியோரை தரிசித்தோம். இம்முயற்சிக்கு அனைவரும் ஆசி வழங்கியதுடன் முழு ஒத்துழைப்பும் அளிப்பதாக உறுதி கூறினர். மற்ற மடாதிபதிகளையும் சான்றோர்களையும் சந்திக்க முயன்று வருகிறேம். அனைவரும் தாமே முன்வந்து இதற்கு ஆசிகூறி இப்பணியில் பங்கேற்பர் என நம்புகிறேம்.

இதற்கிடையில் கீழ்க்காணும் செயல் திட்டங்களை வகுத்துள்ளோம்.

வணக்கத்துக்குரிய தருமபுரம் ஆதீனம், மதுரையாதீனம் மகாசன்னிதானங்களும், பூஜ்ய பேஜாவர் சுவாமிகளும் ஜூலை இரண்டாவது, மூன்ருவது வாரங்களில் திருநெல்வேலி, ராமநாத புரம் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வர விரும்புவதாகக் கருத்து தெரிவித்துள்ளனர். நமது சமயத் தலைவர்களின் வருகையை ஒட்டி அந்தந்தப் பகுதிகளில் பாத யாத்திரை, மாநாடு முதலியவற்றை நடத்துவதற்காக உள்ளூர் பெருமக்களின் ஒத்துழைப்பைக் கோருவதற்காக அவர்களைத் தொடர்பு கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். ஜூலை 17-ஆம் தேதி முதல் 26-ஆம் தேதி வரை ராமனுதபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொண்டர் கள் பாதயாத்திரை நடத்தி ஹிந்து சமுதாயத்தைச் சார்ந்த அனைத்து மக்களிடையேயும் நல்லெண்ணத்தையும் சகோதரத்துவத்தையும் உருவாக்க முயற்சிப்பதுடன் அனைவருக்கும் சம அந்தஸ்தை உருவாக்கப் பாடுபடுவர். இந்தப் பாதயாத்திரையில் ஹிந்து சமுதாயத்தை நேசிக்கும் அனைவரும் தம்மைத் தொண்டர்களாகப் பதிவு செய்து கொள்ளுமாறு கோருகின்ருேம். இந்தப் பாதயாத்திரையின் நிறைவாக ராமநாதபுரத்தில் ஜூலை 27-ஆம் தேதியன்று ஆத்மசக்திக்காக மாபெரும் கூட்டு உபவாசத்தையும், பஜனைகளையும், சமயச் சொற்பொழிவுகளையும் நடத்த நினைக்கிருேம். நமது சமயத்தலைவர்கள் அழைக்கப்படவிருக்கின்றனர். அந்நிகழ்ச்சியின் நிறைவில் ஹிந்து சமுதாயத்திலிருந்து தீண்டாமையை ஒழித்துக் கட்டவும் ஹிந்து சமுதாய ஒற்றுமைக் காக பாடுபடவும் அனைவரும் சபதம் ஏற்பர்.

அதே நாளில் தமிழ்நாடு முழுவதும் எல்லா இடங்களிலும் ஹிந்து ஒற்றுமையை உருவாக் கும் முயற்சி வெற்றி பெற இறைவனருள் வேண்டி எல்லா ஆலயங்களிலும் விசேஷ அர்ச்சனை களும் பிரார்த்தனைகளும் நடத்தப்படும். ஆங்காங்குள்ள ஹிந்து இயக்கங்களும் அன்பர்களும் அன்று உபவாசமிருந்து மாலையில் கூட்டுவழிபாடு நடத்தி சபதமேற்புவிழா நடத்த முன்வர வேண்டுமென கோருகிருேம்.

பற்பல நூற்ருண்டுகளாக நீடித்து வரும் நோயை ஒரே நாளில் தீர்த்துவிட முடியாது என்பது நமக்கு நன்கு தெரியும். குணமாகக் காலம் பிடிக்கும். ஆனுல் முழு சமுதாயமும் உறுதி பூண்டு இந்தத் தீமையை ஒழித்துக்கட்டி முன்னேற வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டால் வெற்றி குறித்து ஐயமில்லை. ஹிந்து சமுதாயப் பெருமக்கள் வலிய முன்வந்து ஹிந்து ஒற்றுமை மையம் ஏற்றெடுத்துள்ள பல்வேறு திட்டங்களில் முழு மனதாக ஒத்துழைக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிருேம். இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற தாராள மாக நிதியுதவி அளிக்குமாறும் கோருகிருேம்.


மற்ற விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்க:

இராம. கோபாலன்,
இணை அமைப்பாளர்,
ஹிந்து ஒற்றுமை மையம்,
37, ஆராவமுது தோட்டத் தெரு,
எழும்பூர், சென்னை - 600 008.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 61	ஜுலை — 1981	இதழ் 7

பொருளடக்கம்



ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

— திருமூலர்

தொகுதி 61	துர்மதி ௵ ஆடி ௴	இதழ் 7

பிரார்த்தனை

शारदा शारदाम्भोजवदना वदनाम्बुजे ।
सर्वदा सर्वदाऽस्माकं सन्निधिं सन्निधिं क्रियात् ॥

சாரதா சாரதாம்போஜவதநா வதநாம்புஜே |
ஸர்வதா ஸர்வதா அஸ்மாகம் ஸந்நிதிம் ஸந்நிதிம் க்ரியாத் ||

சரத்காலத் தாமரை போல் முகமுடையவளும், சாரதா என்ற பெயருடையவளும், அனைத்தையும் அளிப்பவளுமான சரஸ்வதி தேவி எங்கள் முகமான தாமரையில் எப்போதும் வீற்றிருந்து நற்செல்வத்தை நல்க வேண்டும்.

ஓடாமல் பாழுக் குழையாமல்
ஓரம் உரைப்பவர்பால்

கூடாமல் நல்லவர் கூட்டம் விடாமல்
வெங்கோபம் நெஞ்சில்

நாடாமல் நன்மை வழுவாமல்
இன்றைக்கு நாளைக்கென்று

தேடாமல் செல்வம் தருவாய்
சிதம்பர தேசிகனே,

—பட்டினத்தார்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

புதன்கிழமை, செப்டம்பர் 26, 1883

ஸ்ரீராமகிருஷ்ணர்: வேதங்களில் விதித்துள்ள சடங்குகளை இயற்றுவது மிக மிகக் கடினம். அத்துடன் மக்களோ இக்காலத்தில் அடிமை இயல்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.*

மற்றோர் உண்மையும் இருக்கிறது: 'பன்னிரண்டு ஆண்டுக் காலம் ஒருவனுக்குக் கீழே அடிமையாக இருந்து ஒருவன் வேலை செய்தால் அப்படி வேலை செய்பவன் அடிமையாகவே ஆகிவிடுகிறான்' என்று சொல்லப்படுகிறது. அவ்வளவு காலம் யாருக்குக் கீழே அவன் வேலை செய்து வருகிறானோ அந்த எஜமானனின் இயல்பு அவனுக்கும் வந்துவிடுகிறது. எஜமானனுடைய ரஜோகுணம், தமோகுணம், கொடூர மனப்பான்மை, ஆடம்பரத்தில் விருப்பம் போன்றவையெல்லாம் வேலை செய்யும் வேலைக்காரனுக்கும் வந்து விடுகின்றன. ஒருவருக்குக் கீழே வேலை செய்யச் செய்ய இவ்விதம் ஏற்பட்டு விடுகிறது. எஜமானருக்குக் கீழே அடிமையாக வேலை செய்வதோடு மட்டும் அவர்கள் நின்று விடுவதில்லை. அந்த உத்தியோக காலம் முடிந்த பிறகுங்கூட அவர்கள் 'பென்ஷன்' அனுபவிக்கிறார்கள்.

ஒரு சமயம் வேதாந்தியான ஒரு சாது இங்கே வந்திருந்தார். அவர் மேகத்தைப் பார்த்தால் நடனமாடுவார். காற்றடித்து மழை பெய்தால் அவருக்குப் பெரிதும் மகிழ்ச்சி உண்டாகும். அவர் தியானம் செய்துகொண்டிருந்தபோது யாரேனும் அவர் அருகில் சென்றால் அவருக்கு வெகுவாகக் கோபம் வந்துவிடும். நான் ஒரு நாள் அவ்விதம் அவரது அருகில் சென்று விட்டேன். நான் சென்றது அவருக்குப் பெரிதும் வெறுப்பை உண்டுபண்ணிவிட்டது. அவர் எப்போதும் 'பிரம்மம் சத்தியம், ஜகத் மித்யை' என்று நித்திய அநித்தியப் பொருள்களைப் பற்றிய ஞானவிசாரம் செய்தபடி இருப்பார். மாயையினால் நாமரூபங்களைக் கொண்ட பலவற்றை நாம் பார்க்கிறோம் அல்லவா? அதைக் குறிக்கும் வகையில் அவர் ஒரு சரவிளக்குச் சட்டத்திலிருந்து எடுத்த ஒரு முப்பட்டைக் கண்ணாடியை வைத்துக்கொண்டு திரிவார். முப்பட்டைக் கண்ணாடியை வைத்துக்கொண்டு பார்த்தால் அதில் பல வேறு நிறங்களைப் பார்க்கலாம்; ஆனால் உண்மையிலோ எந்த நிறமும் இல்லவேயில்லை. அது போலவே உண்மையில் பிரம்மத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஆனால் மாயை காரணமாக, அகங்கார உணர்ச்சி இருப்பது காரணமாக, பலவேறு பொருள்கள் இருப்பதைப் போன்ற ஒரு தோற்றம் நமக்கு இருக்கிறது. மாயைக்கு உட்பட்டுவிடக் கூடும், பற்றுதல் ஏற்பட்டு விடக்கூடும் என்ற காரணத்தினால் அந்த வேதாந்தி சாது, எந்தப் பொருளையுமே ஒரு தடவைக்கு மேல் இரண்டாவது தடவை பார்க்கவே மாட்டார். அவர் நீராடிக்கொண்டிருக்கும்போது பறவை பறப்பதைக் கண்டு ஞானவிசாரம் செய்வார். ஹலதாரி அவருடன் சம்ஸ்கிருத இலக்கணம் பற்றி விவாதித்தார். அந்தச் சாதுவுக்கு சம்ஸ்கிருத இலக்கணம் தெரிந்திருந்தது.

* அப்போது நிலவிய அன்னிய ஆட்சியை இது குறிப்பதாக இருக்கக்கூடும்.

அவர் இங்கு மூன்று நாள் தங்கியிருந்தார். ஒரு நாள் கங்கைக் கரையின் அருகில் புல்லாங் குழலோசையைக் கேட்ட அவர், "இது போன்ற ஓசையைப் பிரம்மதரிசனம் பெற்ற ஒருவர் கேட்பாரானுல் அவர் சமாதிநிலையை அடைந்து விடுவார்" என்று குறிப்பிட்டார்.

இவ்விதம் அந்தச் சாதுவைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்த குருதேவரிடம் பரம ஹம்ச நிலை எய்திய ஒருவர் எப்படி இருப்பார் என்பதைப் பக்தர்கள் தாமே கண்டனர். ஒரு குழந்தையைப் போல அவர் நடந்து கொண் டார். முகத்தில் புன்சிரிப்பு ஓரேயடியாகத் தவழ்ந்தபடி இருந்தது. அவர் தமது உடலில் துணி எதுவும் இல்லாமல் திகம்பரராகக் காட்சி அளித்தார். கண்களில் ஆனந்த பரவசம் ததும்பிக் கொண்டிருந்தது. பிறகு சிறிய கட்டிலின் மீது திரும்பவும் அமர்ந்து கொண்டார். மறுபடி அவர் பேச ஆரம்பித்தார். அந்தப் பேச்சு பக்தர்களின் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம-விடம்) : நான் தோதா புரியிடம் வேதாந்தம் கற்றுக் கொண்டேன். 'பிரம்மம் சத்தியம், ஜகத் மித்யை.' ஒரு ஜால வித்தைக்காரன் வந்து எத்தனையோ விதமான ஜாலங்களைக் காட்டுகிறன். மாஞ்செடியை வரவழைக்கிறன். மாம்பழம் உட்படப் பல வற்றை அவன் வரவழைக்கிறன். ஆனுல் இவை யாவும் வெறும் ஜாலவித்தைகளேயாகும். ஜால வித்தைக்காரன் ஒருவன் மட்டும்தான் உண்மையில் இருக்கிறன்.

ம— : வாழ்க்கையே ஒரு நீண்ட தூக்கம் போலக் காணப்படுகிறது. நாம் எல்லா வற்றையும் உள்ளது உள்ளபடியே பார்ப்ப தில்லை என்பதை மட்டும் நான் புரிந்துகொண் டிருக்கிறேன். எந்த மனதினுல் ஆகாயத்தை உள்ளபடியே அறிந்துகொள்ள இயலுவ தில்லையோ, அதே மனதைக் கொண்டுதான் நாம் பிரபஞ்சத்தையும் பார்க்கிறேம். ஆகவே நம்மால் எப்படிப் பொருள்களைச் சரியானபடி பார்க்க முடியும்?

ஸ்ரீராமகிருஷ்ணர் : இன்னெரு விதமாகவும் சொல்லலாம். ஆகாயத்தை நாம் சரியானபடி பார்ப்பதில்லைதான். ஆகாயம் பூமியைத் தொடுவது போல் அல்லவா நாம் பார்க்கிறேம்? அப்படி இருக்கும்போது மனிதன் எப்படிச் சரியான காட்சியைக் காண்பான்? மனிதனின் மனம் அவித்யை என்ற விஷக் காய்ச்சலுக்கு உட்பட்டுப் பேதலித்து அல்லவா போயிருக் கிறது?

குருதேவர் இனிய குரலில் பாட ஆரம்பித் தார்.

இது ஜன்னி ஜுரமேதான். லௌகிக மக்கள் எப்படிச் சண்டை போட்டுக்கொள்கிறர்கள் என்பதை நீங்கள் பார்த்ததில்லையா? எதற் காகச் சண்டையிடுகிறேம் என்பதுகூட அவர் களுக்குச் சரியாகத் தெரியாது. அதுவும் எவ்வளவு தீவிரமாகச் சண்டை போடுகிறர்கள்! 'உனக்கும் இந்தக் கதியேதான் நேரும்! உன்னை என்ன செய்கிறேன் பார்!' என்றெல்லாம் பய முறுத்தல்! என்ன கத்தல், என்ன ஏச்சுப் பேச்சு!

ம— : 'காலிப்பெட்டிக்குள் எதுவும் இல்லை. அப்படி இருந்தும் உள்ளே பணம் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு அதை இரண்டு பேர் அப்படியும் இப்படியும் இழுக்கிறர்கள்' என்று நான் கிசோரியிடம் கூறினேன். உடல் தாங்கியிருப்பதுதான் இத்தனை விதமான தொந்தரவுகளுக்கும் மூலகாரணம். இதையெல் லாம் பார்த்துத்தான் ஞானிகள் தலையணையுறை போல இருக்கும் இந்த உடலை விட்டொழித் தால்தான் பிழைக்கலாம் என்று கருது கிறர்கள்.

குருதேவர் காளிகோவிலுக்குச் சென்றர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : ஏன் அவ்விதம் நினைக்க வேண்டும்? இந்தச் சம்சார வாழ்க்கை ஒரு மாய ஜாலச் சட்டம் போல இருக்கலாம். ஆனுல் அது இன்ப மாளிகை போன்றது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உடல் இருப்பதனுல் என்ன கஷ்டம்? உலக வாழ்க்கையை இன்ப மாளிகையாகவும் ஆக்கிக்கொள்ள முடியுமே.

ம— : தொடர்ந்த இன்பம் எங்கே இருக்கிறது?

குருதேவர் : ஆம், அப்படிப்பட்ட இன்பம் எங்கே இருக்கிறது?

குருதேவர் பவதாரிணியின் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார். தேவியின் முன் தரையில் வீழ்ந்து வணங்கினர். ம—வும் அவ்விதமே செய்தார்.

பவதாரிணி தேவியின் சந்நிதிக்கு எதிரே இருக்கும் தாழ்ந்த படிக்கட்டின் மீது குருதேவர் ஜகன்மாதாவான தேவியைப் பார்த்தபடி அமர்ந்தார். அவர் இடுப்பில் சிவப்புக் கரை வேஷ்டி மட்டும் அணிந்திருந்தார். அந்த வேஷ்டியின் ஒரு பகுதியைத் தோளின் மீதும் முதுகின் மீதும் போட்டுக்கொண்டிருந்தார். மேற்குத் திசையில் நாட் மந்திர் என்ற மண்டபத்தின் தூண் இருந்தது. குருதேவரின் அருகில் ம— உட்கார்ந்திருந்தார்.

ம— : அவ்விதம் தொடர்ந்த இன்பம் என்பது இல்லாதிருக்குமானால், ஒருவன் உடல் தரித்து ஏன் வாழ வேண்டும்? கர்மபலனை அனுபவிப்பதற்காகத்தான் நாம் உடல் எடுக்கிறோம் என்பதும் எனக்குப் புரிகிறது. ஆனால் எப்படிப் பட்ட வினைகளை இந்த உடல் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறது என்று யாருக்குத் தெரியும்? துரதிருஷ்டம் என்னவென்றால் வாழ்க்கையில் நாம் மரணத்திற்கொப்பான பலவித அவதிகளுக்கு உட்பட வேண்டியிருக்கிறது.

குருதேவர் : அவரை விதை சாணக் குவியலில் விழுந்தாலும் அவரைச்செடியாகத்தான் முளைக்கிறது.

ம— : அப்படி இருந்தும் அஷ்ட பந்தங்கள் (எட்டு விதமான பந்தங்கள்) வேறு இருக்கின்றன.

குருதேவர் : அவை அஷ்ட பந்தம் அல்ல, அஷ்ட பாசம். அவை இருந்தால் என்ன? ஆண்டவனின் கிருபை மட்டும் ஒருவனுக்கு இருக்குமானால் ஒரே ஒரு விநாடியில் அஷ்ட பாசங்களும் அவனை விட்டுத் தொலைந்து போய்விடும். அது எப்படித் தெரியுமா? ஆயிரம் ஆண்டுகளாக ஓர் அறையில் இருள் சூழ்ந்திருந்தது என்று வைத்துக் கொள்வோம். அந்த அறைக்குள் வெளிச்சம் வருமானால் அந்தக் கணத்திலேயே இருள் நீங்கிவிடுகிறது அல்லவா? சிறிது சிறிதாக இருள்நீங்குவது என்பது இல்லை. ஜால வித்தைக்காரன் வித்தை செய்வதை நீ பார்த்ததில்லையா? ஏராளமான முடிச்சுக்களைக் கொண்ட ஒரு கயிற்றின் நுனியை ஜால வித்தைக்காரன் ஒரு தூணில் கட்டுகிறான். அந்தக் கயிற்றின் மற்றொரு நுனியைத் தன் கையில் பிடித்துக்கொள்ளுகிறான். கயிற்றை இரண்டொரு முறை உதறுகிறான். அப்படி அவன் உதறியவுடனே எல்லா முடிச்சுக்களும் அவிழ்ந்துவிடுகின்றன. ஆனால் மற்றொருவன் அதுபோல முடிச்சுக்களை அவிழ்த்து விடுவதற்கு மூச்சைப் பிடித்துக்கொண்டு முயற்சி செய்தாலும்கூட, கயிற்றை அவிழச் செய்ய முடிவதில்லை. குருவின் கிருபை இருக்குமானால் எல்லா முடிச்சுக்களும் ஒரு கணத்திலேயே அவிழ்ந்து போகும்.

அது சரி, கேசவ சேன் ஏன் இவ்வளவு மாறிவிட்டார் என்பது உனக்குத் தெரியுமா? இப்போதெல்லாம் அவர் இந்த இடத்திற்குச் சற்று அதிகமாகவே வந்து போகிறார். இங்கிருந்து (அதாவது என்னிடமிருந்து) எப்படி நமஸ்காரம் செய்வது என்பதைக் கற்றுக்கொண்டார். ஒரு நாள் நான் அவருக்கு, 'சாதுக்களுக்கு இந்த முறையில் நமஸ்காரம் செய்யக்கூடாது' என்று பாடம் புகட்டினேன். ஒரு நாள் ஈசானருடன் நான் கல்கத்தாவுக்கு வண்டியை அமர்த்திக்கொண்டு சென்றேன். ஈசானர் கேசவ சேனரின் வரலாறு முழுவதையும் என்னிடமிருந்து கேட்டுக்கொண்டார். "இந்த இடத்திலிருந்து (குருதேவரிடமிருந்து) எல்லாச் செக்குகளையும் சரிபார்த்துப் பணம் பெறும் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் பாங்கில் பணம் வாங்கிக்கொள்வது சாத்தியமாகும்!" என்று ஹரீஷ் சரியாகச் சொன்னார். (குருதேவர் சிரித்தார்.)

ம — பேசாமல் குருதேவர் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். குருவின் கிருபை கிடைத்தால் சச்சிதானந்தம் என்ற காசோலையைச் சரிபார்த்து ஆத்ம சாட்சாத்காரம் என்னும் பணம் பெறும் அனுமதியைப் பெற்றளிக்கிறது என்று ம— தெரிந்து கொண்டார்.



எது பக்தி? எது பூஜை? எது தியானம்?

கடவுள்மீது மனதை நிலையாக எப்போது படிய வைக்கிறோமோ, கடவுளைப் பற்றி மட்டுமே எப்போது அதிகமாகப் பேசுகிறோமோ, அப்போது நாம் தியானம் செய்கிறோம். அதுதான் தியானம்; அதுதான் பக்தி; அதுதான் பக்திமயமான தியானம்.

'ஆண்டவனிடம் பக்தி கொள்கிறோம், பக்தனாக இருக்கிறோம், பக்தி செய்கிறோம்' என்று சொல்கிறோம். அந்தப் பக்தியில் நாம் என்ன செய்கிறோம்? நாம் பக்தர்களாக இருக்கிறோம் என்றால் என்னவெல்லாம் செய்து பக்தர்களாக இருக்கிறோம்; பக்தியை வளர்க்கிறோம்?

நாம் கோயிலுக்குப் பக்தியோடு போகிறோம். அங்கே என்ன செய்கிறோம்? தேங்காய் உடைக்கிறோம். கர்ப்பூரம் ஏற்றுகிறோம். ஊதுவத்தி கொளுத்துகிறோம். கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். கோயிலில் கூட்டம் இல்லாமலிருந்தால் கீழே விழுந்து கும்பிடுகிறோம். அர்ச்சகருக்குப் பத்து அல்லது இருபது காசு போடுகிறோம். அவ்வளவுதான், அதோடு நம் பக்தி துவங்கி, வளர்ந்து, முடிந்துவிடுகிறது.

ஐந்து வயதில்! ஐம்பது வயதில்!

இந்தப் பக்தியை நாம் ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கும்பொழுது ஆரம்பிக்கிறோம். பத்து வயதில் அதையே செய்கிறோம். பதினைந்து வயதில் அதையே செய்கிறோம். முப்பதாவது, நாற்பதாவது வயதிலும், ஐம்பதாவது வயதிலும் அதையே செய்துகொண்டிருக்கிறோம். இதையே கோயிலிலும் செய்கிறோம்; வீட்டிலும் செய்கிறோம்.

ஒரு சிறுவன்

ஒரு சிறுவனை நாம் முதல் வகுப்பில் படிப்பதற்கு அனுப்புகிறோம். முதல் வகுப்பில் நன்றாகப் படித்துவிட்டான். இரண்டாவது வகுப்புக்கு மாற்றிவிட்டார்கள். இரண்டாவது வகுப்பிலும் அவன் முதல் வகுப்புப் பாடங்களையே படித்துக் கொண்டிருக்கிறான்; இரண்டாம் வகுப்புப் பாடத்தைப் படிக்கவில்லை. அவனைப் 'பெயில்' ஆக்கிவிட்டார்கள். அடுத்த ஆண்டும் அவன் இரண்டாம் வகுப்புப் பாடத்தைப் படிக்கவில்லை. முதல் வகுப்புப் பாடத்தையே படித்துக்கொண்டிருக்கிறான். முதல் வகுப்புக் கணக்கையே போட்டுக்கொண்டிருக்கிறான். இரண்டாம் வகுப்புப் பாடத்தை ஓர் எழுத்துக்கூடப் படிக்கவில்லை. இந்த ஆண்டும் அவனை அதே வகுப்பில் போடுகிறார்கள். மூன்றாவது வருடம், நான்காவது வருடம், ஐந்து, பத்து வருடங்கள் ஆகின்றன. அவன் இன்னும் முதல் வகுப்புப் பாடத்தையே படித்துக் கொண்டு அந்த வகுப்பிலேயே உட்கார்ந்துகொண்டிருக்கிறான். இவனை நாம் என்னவென்று சொல்வோம்? 'முட்டாள்! வடிகட்டின முட்டாள்!' என்று சொல்வோம்.

இங்கே!

ஆனால் இங்கே ஐந்து வயதில் கோயிலுக்குப் போய்த் தேங்காய் உடைத்துக் கர்ப்பூரம் ஏற்றி, ஊதுவத்திக் கொளுத்திப் பக்தி செய்ய

ஆரம்பிக்கிறோம். ஐந்து வயதிலிருந்து பத்து வயதாயிற்று, இருபது வயதாயிற்று, முப்பது, நாற்பது வயதாயிற்று. அறுபது வயதும் ஆயிற்று. இன்னும் தேங்காய் உடைத்துக் கொண்டும், கர்ப்பூரம் ஏற்றிக்கொண்டும், மணி அடித்துக்கொண்டும் இருக்கிறோம். காலம் காலமாக ஒரே காரியத்தை அந்தச் சிறுவனைப் போல் செய்துகொண்டே இருக்கிறோம். அதைத் தவிர வேறு எதுவும் செய்யவே இல்லை. அப்படியென்றால் நாம் யார்? நாம் அனைவரும் ஆன்மிக முட்டாள்கள் இல்லையா? அல்லது பக்தி செலுத்துவதில் இந்த ஆரம்ப காலக் காரியங்களைத் தவிர வேறு எதுவும் இல்லையா? அல்லது ஒரே காரியத்தைப் புத்தி தெரிந்த காலத்தில் துவங்கி, புத்தி தேய்ந்து சாகும்வரை செய்துகொண்டிருப்பது தான் பக்தியா?

இல்லை, அது பக்தியே இல்லை! பக்தி என்பது மகத்தானது. அதனுடைய உண்மையான பொருளை — உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இலட்சம் இலட்சம் பூசாரிகள்!

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு முன்னால் இலட்சம் இலட்சமாக இந்த நாட்டில் பூசாரிகள் இருந்தார்கள். இன்றைக்கும் இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரும் பூசாரியாகத்தான் இருந்தார். ஆனால் இந்தப் பூசாரிகளுக்கும் ஸ்ரீராமகிருஷ்ணருக்கும்தான் எவ்வளவு வேற்றுமை!

ஸ்ரீராமகிருஷ்ணர் தம் கண்களால் தாம் பூசிக்கும் தேவியை—காளியை நேராகப் பார்த்தார். அந்தச் சிலையின் மூக்கின் அருகே கை வைத்துப் பார்த்து மூச்சு வருவதை உணர்ந்தார். தாம் பூசை செய்துவிட்டுப் படைக்கிற நைவேத்தியத்தையெல்லாம் காளி உண்பதைக் கண்டார். தம்முடன் காளி பேசுவதையும் கண்டார். அவரும் காளியோடு பேசினார். எப்போதும் காளி அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்ல, அவளுடைய நான்கு வயதுக் குழந்தையைப் போல் அவள் பின்னாலேயே சுற்றினார். இது அவர் பூசை செய்து கண்ட பலன். நாம் என்ன பலன் கண்டோம்? இன்னும் மணி அடிப்பதிலும், தேங்காய் உடைப்பதிலுமே நின்று கொண்டிருக்கிறோம். வேறு எதையும் காணவில்லை.

மூழ்கினார்!

ஸ்ரீராமகிருஷ்ணர் காளிக்குப் பூசை செய்ய ஆரம்பித்தார். சில நாட்கள் சாதாரணப் பூசை நடந்தது. பிறகு நினைத்தார்: 'பூசை என்பது இதுதானா? காளிக்குப் பூ வைப்பதும், பிரசாதம் படைப்பதும், கர்ப்பூரம் காட்டுவதும், மணியடிப்பதும், ஒன்று இரண்டு பாட்டுப் பாடுவதும்தானா பூசை? பூசை என்பது இவற்றுடன் முடிந்துவிடுகிறதா?' என்று நினைத்தார். அவருக்குப் பூசை அதோடு நின்றுவிடுவதாகத் தெரியவில்லை. அப்படியானால் பூசை எங்கே செல்கிறது? எது உண்மையான பூசை?

தம்மைப் போல் இதற்கு முன்பு கடவுளைப் பூசை செய்தவர்களை அவர் நினைத்துப் பார்த்தார். சாதாரணப் பூசை செய்த அவர்கள், கடைசியில் கடவுளையே நேரில் கண்டிருந்தார்கள். அப்படி என்றால் பூசையின் பலன் கடவுளை நேரில் காண்பதில் முடிந்திருக்கிறது. இந்தப் பூசையிலிருந்து மேலே தொடர வேண்டியது ஏதோ இருக்கிறது என்று உணர்ந்தார். அவை என்னவாக இருக்கும் என்பதை அறிந்து, அவர்கள் செய்த சாதனையில் மூழ்க ஆரம்பித்தார். சாதனை என்றால் சாதாரணமான சாதனைகளா? நினைத்தாலும் உடம்பெல்லாம் புல்லரிப்பை உண்டாக்கும் கடுமையான சாதனைகள்.

நாம்கூடத்தான்!

நாம்கூடத்தான் தியானத்தில் அமர்கிறோம். அமர்ந்தவுடனே கணக்கில்லாத — சம்பந்தமே இல்லாத பலவேறு எண்ணங்கள் எழுந்து நம்மைச் சூழ்ந்துகொள்கின்றன. நம்முடைய மனதில் பெரிய குழப்பத்தையும் சலிப்பையும் உண்டாக்கி, தியானம் செய்வதிலிருந்து நம்மை எழுப்பித் துரத்திவிடுகின்றன. அதோடு நமது தியானம் முடிந்துவிடுகிறது.

நாம் அலுவலகத்தில் வேலை செய்யும் பொழுதும் அல்லது கடையில் அமர்ந்து வியாபாரம் செய்யும்பொழுதும் ஆயிரம்

ஆயிரம் நினைப்புகளை நினைக்கிறோம். அப்பொழுதெல்லாம் கடவுள் நினைப்பு அவற்றுக்கு நடுவே எழுவதே இல்லை. எழுந்து தொந்தரவு தருவதே இல்லை. ஏன் கடவுள் நினைவு அங்கெல்லாம் எழுவதில்லை? ஒரே ஒரு விநாடிகூட நாம் கடவுளைப் பற்றி நினைப்பதே இல்லை. ஆனால் அதே நேரத்தில் அந்த அலுவலகத்திலும் கடையிலும் அமர்ந்து, அலுவலுக்கும் வியாபாரத்திற்கும் கொஞ்சம்கூடத் தொடர்பே இல்லாத ஆயிரம் ஆயிரம் விஷயங்களை ஆவி பறிபோகும்படி பேசுகிறோமே!

ஏன் கூடாது?

அலுவலகத்திலும் கடையிலும் வேலை செய்யும் பொழுது, கல்லூரியில் பள்ளியில் பாடம் நடத்தும் பொழுது, மருத்துவம் செய்யும் பொழுது மற்றும் பல காரியங்களை நாம் ஆழ்ந்து செய்யும் பொழுது ஒரு சிறு நினைவாவது கடவுளைப்பற்றி மனதில் வைத்திருக்கலாமே!

அது முடியவில்லை என்றால் அந்த வேலையின் துவக்கத்தில், 'பகவானே! உன்னை நினைத்து நான் இந்த வேலையைத் துவக்குகிறேன்' என்றும், இடையில் அந்த வேலையில் சிறிது ஓய்வு கிடைக்கும்போது, 'பகவானே! இந்தக் கடினமான வேலையில் இதுவரை உன்னை நான் மறந்திருந்தேன்; இப்போது நினைத்துக் கொள்ளுகிறேன்' என்றும், வேலை முடிந்ததும், 'பகவானே! உன் அருளால் வேலை முடிந்துவிட்டது. இனி உன்னையே நினைக்கும் அருளைக் கொடு' என்றும் வணங்கலாமே!

சின்னஞ்சிறு வேலையைச் செய்வதிலிருந்து மணிக்கணக்கில் செய்கிற மிகப் பெரிய வேலை வரை இதே பழக்கத்தை நாம் மேற்கொள்ளலாமே. அப்படி மேற்கொண்டால், தியானத்தில் அமரும்போது மற்ற நினைப்புகள் வருவது குறைந்து, கடவுளைப் பற்றிய நினைவுகளே வருவதைக் காணலாம்.

சுலபம் அல்ல

'தியானம் என்பது மிகச் சுலபமானது. ஓர் இடத்தில் கையைக் காலை மடக்கிக்கொண்டு, கண்ணை மூடி உட்கார்ந்துவிட்டால் கிடைத்துவிடக் கூடியது' என்று நினைக்கிறோம். இது மிகவும் தவறான எண்ணம்.

கிராமங்களில் பயிர் செய்வதைப் பார்க்கிறோம். பயிரிலிருந்து விளைச்சலை எடுக்க வேண்டும் என்றால் நாற்று நட்ட சாயங்காலமே அரிவாளை எடுத்துக்கொண்டு வயலுக்குப் போகமாட்டார்கள். போனால் என்ன கிடைக்கும்? சேறும் சேற்றில் நட்ட நாற்றும் தான் கிடைக்கும். ஆறு மாதம் காத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் காப்பாற்ற வேண்டும். நாள்தோறும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வேண்டிய நேரத்தில் களை எடுக்க வேண்டும். உரம் இடவேண்டும். காவல் இருக்க வேண்டும். இப்படி ஆறு மாதம் இருந்தபிறகு தான் அறுவடை கிடைக்கும்.

ஆயுள் பயிர்

தியானம் என்பது ஆறு மாதப் பயிரல்ல, ஆயுள் பயிர். நாம் தியானத்தில் அமர்ந்தவுடனே மனம் ஒடுங்கி, சித்தம் ஒடுங்கி, ஆனந்தம் எனப்படும் அற்புதமான கடவுள் நிலை ஏற்பட வேண்டுமானால், நாம் காலையில் விழித்து எழுவது முதல் உறங்கும்வரை, ஏன், உறக்கத்தில்கூட, கடவுள் நினைவைத் தொடர்ந்து மனதில் நிலைபெறச் செய்ய வேண்டும்; பாதுகாக்க வேண்டும்; வளர்க்க வேண்டும். அப்படிச் செய்து நாள்தோறும் மாலையில் தியானத்தில் அமர்ந்தால் மனம் மிக வேகமாக ஒடுங்கும். உலக நினைவுகளின் தொல்லையே இல்லாமல் அளவற்ற ஆனந்தத்தில் மிதந்து செல்லும்.

இப்படி எப்போதும் கடவுளைப் பற்றியே நினையுங்கள் என்பதனால், எல்லோரும் மனைவி மக்கள், வீடு வாசல் செல்வம் எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள் என்றோ, அவை அவசியம் இல்லை என்றோ சொல்லவில்லை. அவற்றுக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். கடவுள் நினைப்பை அதிகமாக்குங்கள். கடவுள்மீது மனதை நிலை நிறுத்திய பிறகு மற்றவைமீது மனதைச் செலுத்துங்கள்.

மன ஒருமை (Concentration)

சிறுவர்கள் திரையரங்கங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள். படம் ஓடிக்கொண்டிருக்கிறது. தங்களுடைய விளையாட்டு, தாங்கள்

இருக்கும் இடம் எல்லாவற்றையும் மறந்து விட்டுத் திரைப்படத்தோடு ஒன்றிவிடு கிறார்கள்.

கடையில் அமர்ந்து வியாபாரக் கணக்கில் ஆழ்ந்து போயிருக்கும் ஒருவர் அந்தக் கணக்குப் புத்தகத்திலேயே மனம் ஒன்றிக் கிடக்கிறார். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் அவரால் பார்க்கக் கூட முடியவில்லை.

ஓர் இளைஞன் ஒரு கதையை நாவலைப்படித்துக் கொண்டிருக்கிறான். பள்ளிக்குப் போகும் நேரம் கூட அவனுக்குத் தெரிவதில்லை. சாப்பிடுவது கூட மறந்துவிடுகிறது. அந்த நாவலிலேயே ஒன்றிப்போகிறான். சுற்றுப்புறமும் சூழ்நிலை யும் அவனுக்கு மறந்துவிடுகின்றன.

இவையே தியானம்

இவைதாம் தியானம். இப்படி மனிதர்கள் தியானத்தில் ஆழ்ந்து மூழ்குவதை நாம் வாழ்க்கையில் அன்றாடம் பார்க்கிறோம். ஒரு குருவிக்காரன் உண்டிவில்லில் ஒரே கல்லில் இரண்டு காக்கைகளை அடித்துவிடுகிறான். இது தான் மன ஒருமை (Concentration), தியானம்.

குருவிக்காரன் ஒன்றும் தெரியாதவன், படிக் காதவன், புராணம், உபநிஷதம், வேதம் அவனுக்குத் தெரியாது. ஆனால் அவனால் மனதை ஒருமுகப்படுத்த முடிந்தது. ஒரு விநாடி தியானத்தில் அவன் பெரிய காரியத்தை - ஒரே கல்லில் இரண்டு காக்கைகளை அடித்து விழ்த்துகிற காரியத்தைச் செய்துவிட்டான். ஏன் அவன் அப்படிச் செய்தான்? எப்படி அவனால் அதைச் செய்ய முடிந்தது?

தேவைகள்

எப்படி முடிந்தது என்றால் தேவையால் முடிந்தது. அவன் குடும்பம் பிழைக்க வேண்டும். அதற்கு உணவு வேண்டும். அந்த உணவின் தேவைக்காக இரண்டு காகம் தேவைப்பட்டன. கொஞ்சநேரத் தியானம்-மன ஒருமைப்பாடு அந்தத் தேவையைப் பூர்த்தி செய்துவிட்டது.

இது போலவே நாம் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் பொருள்களை வேண்டித் தியானம் செய்துகொண்டுதான் இருக்கிறோம். அவற்றை அடைந்துகொண்டும்தான் இருக்கிறோம். அவை யெல்லாம் சின்னஞ்சிறிய பொருள்கள். நமது சின்னஞ்சிறு தேவைகளைத் தீர்ப்பவை.

ஆனால், நமக்குத் தேவையே இல்லாத நிலையை அந்தச் சின்னஞ்சிறு பொருள்களால் தர முடியாது. ஏதாவது தேவை என்றாலும் அந்தத் தேவைகளைத் தேடி நாம் ஓடாமல், தேவையான பொருள்களே நம்மைத் தேடி வரும் நிலையை அவை தரமாட்டா. அவற்றால் தர முடியாது. ஆனால் நாம் அத்தகைய நிலையைப் பெற்றாக வேண்டும்.

எந்தப் பொருளை அடைந்த பிறகு நாம் எல்லாப் பொருள்களையும் அடைந்தவர்கள் ஆவோமோ, யாரைக் கண்டுகொண்டால் நாம் உலகத்தில் எல்லோரையும் எல்லாவற்றையும் கண்டு கொண்டவர்கள் ஆவோமோ, அந்தப் பொருளை வேண்டி நாம் ஆழ்ந்த தியானத்தில் மூழ்க வேண்டும்; அந்தப் பொருளை அடைய வேண்டும். அந்தப் பொருள்தான் பகவான். ஒருவன் தியானத்தில் ஆழ்ந்து போகும்போது சமாதி நிலையை அடைகிறான். சமாதி நிலையில் கடவுளைத் தரிசிக்கிறான். கடவுளோடு வாழ் கிறான். தான் பிறப்பு இறப்புக்களுக்கு உட்பட்ட சாதாரண மனிதன் அல்ல; பிறப்பு இறப்புக் களைக் கடந்தவன் என்பதை உணருகிறான். தானே கடவுள் ஆகிறான். அந்தக் கடவுள் நிலையை அவன் அடைந்த பிறகு அவன் எதைத் தேடியும் ஓட வேண்டியதில்லை. எல்லாம் அவனைத் தேடி வருகின்றன.

இருப்பதைக் கொண்டு திருப்தியடைவது இயல்பான செல்வம். ஆடம்பரம் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஏழைமை.

—சாக்ரடிஸ்

நல்லவனுக்கு, பார்வதி தேவி அன்னை; மகாதேவர் பிதா; சிவனடியார்கள் பந்துக்கள்; மூவுலகும் சொந்த நாடு.

—ஆதிசங்கரர்

குரு தத்துவம்

கி. வா. ஜகந்நாதன்

மக்களாய்ப் பிறந்தவர்கள் முதலில் தாயைத் தெரிந்துகொள்கிறார்கள். தாய் தந்தையைக் காட்டுகிறாள். தந்தை வித்யாகுருவைக் காட்டுகிறார். கல்வி கற்ற மனிதன், அறம் பொருள் இன்பம் என்ற மூன்று உறுதிப் பொருள்களையும் தெரிந்துகொள்கிறான். அந்த மூன்றோடு நின்றால் வாழ்க்கை முழுமையை அடையாது. அதற்கு மேல் வீட்டுநெறியை அறிந்து அந்த நெறியிலே நின்று மேலேற வேண்டும். உலகில் தோன்றிய ஜீவராசிகள் யாவும் ஓரளவு அறிவு படைத்திருந்தாலும், மனிதன் ஒருவன்தான் பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவைப் பெற்றிருக்கிறான். ஐம்பொறிகளால் உணரும் உணர்வை விலங்கினங்களும் பெற்றுள்ளன. அவை வீட்டு நெறியைத் தெரிந்துகொள்ளும் அறிவைப் பெறுவதில்லை.

பகுத்தறிவு பெற்ற மனிதன் தக்கது இன்னது' தகாதது இன்னது என்று அறியும் ஆற்றலைப் பெற்றிருக்கிறான். அவன் வளர வளர அந்த அறிவும் வளர்ச்சியடைகிறது. அனுபவத்தினால் பெறும் அறிவோடு யுக்தியினாலும் அவன் அறிவு வளர்ச்சியைப் பெறுகிறான். நூல்களால் பலவற்றை உணரும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்திருக்கிறது. இவற்றைச் சுருதி, யுக்தி, அனுபவம் என்று சொல்வார்கள்.

நூல்கள், அறிஞர்கள் தம் அனுபவத்தால் அறிந்தவற்றைப் பிறரும் அறிந்துகொள்வதற்காக எழுதியவை. அவை பொது வகையில் நமக்குப் பயன்படுகின்றன. உலகியல் நூல்கள் உலக சம்பந்தமான கருத்துக்களைத் தெரிந்து கொள்ளப் பயன்படும். ஞானநூல்களோ மெய்யறிவை உண்டுபண்ணும். இதுதான் உண்மை என்பதை எடுத்துக் காட்டுபவை ஞானநூல்கள். அடிப்படையான உண்மைகளை அவை சொல்லும்.

மனிதன் உலகின் இயல்பையும், ஆத்மாவின் இயல்பையும், பரமாத்மாவின் இயல்பையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதனோடு பரமாத்மாவை அடைவதற்கு முயல வேண்டும். உண்மையல்லாதவற்றை உண்மை என்று நம்புவது அஞ்ஞானம் அல்லது அவித்தை, அதனால் மேலும் மேலும் பிறப்பை அடைய வேண்டி வரும்.

"பொருள் அல்லவற்றைப்
பொருள் என்று உணரும்.
மருளான் ஆம் மாணாப் பிறப்பு"

என்று திருக்குறள் கூறுகிறது. அந்த மருள் அல்லது அவித்தையைப் போக்கும் மருந்து ஞானம்.



வெறும் நூலாராய்ச்சியினால் ஞானம் உண்டாகாது. ஆத்மாவை உணரும் அறிவே மெய்ஞ்ஞானம். நூலறிவு வேறு, வாலறிவு வேறு. நூலறிவைப் பரோக்ஷ ஞானம் என்றும், வாலறிவை அபரோக்ஷ ஞானம் என்றும் சொல்வார்கள். ஞானநூல்களைப் பயின்றவன் பூகோள நூலைப் படித்தவனைப் போன்றவன். இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன நாடு இருக்கிறது, இன்ன இன்ன மலை இருக்கிறது என்று ஓரளவு தெரிந்துகொண்டவனைப் போன்றவன். அந்த அறிவு முழுமையான அறிவு ஆகாது. அந்த இடங்களுக்குச் சென்று, நேரே அங்குள்ள காட்சிகளைக் கண்டும், அங்குள்ள பொருள்களை நுகர்ந்தும் அனுபவித்தவர்களே உண்மையாக அந்தப் பிரதேசங்களைத் தெரிந்து கொண்டவர்கள் ஆவார்கள்.

அவ்வாறு, பாரமார்த்திக ஞானத்தைப் பெற்றுப் பயிற்சியினால் இறைவனுடைய

திருவருளைப் பெற்று அனுபவ உலகத்தில் புகும் போதுதான் மனிதன் ஆத்மதரிசனம் பெற முடியும். அத்தகைய நிலை வர வேண்டுமானால் ஒரு வழிகாட்டி வேண்டும். திசை தெரியாமல் வழி நடக்கிறவனுக்கு மயக்கம்தான் உண்டாகும். வழிகாட்டி ஒருவன் கிடைத்தால் செல்ல வேண்டிய வழியில் செல்ல முடியும்.

ஆத்மானந்தத்தை அடையும் வழியைக் காட்டவும் ஒரு வழிகாட்டி வேண்டும். அவர் அந்த வழியிற் சென்று பழகினவராக இருக்க வேண்டும். பாரமார்த்திக நெறியிலே நம்மை வழிநடத்திச் செல்கின்ற குருவே நமக்கு வழிகாட்டி. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற கருணையினால் குருநாதர் தம்மை அடைந்து வழிபடும் மாணவனுக்கு, எவ்வாறு சாதனங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுவார். அவர் கூறும் நெறியில் நடந்தால் இடையூறு இல்லாமல் நேர்வழியிலே செல்ல முடியும்.

கடவுளுணர்வு எளிதில் உண்டாவது அன்று. அதிதிவிரமான நம்பிக்கையும், அப்பியாசமும் இருந்தால்தான் அது உண்டாகும்.

குருநாதர் கடவுளுணர்வும் அனுபவமும் நிறைந்தவராக இருப்பதை நன்கு உணர்ந்தால், அவருடைய துணையால் நாமும் நலம் பெறலாம் என்ற உணர்வு உண்டாகும். ஒரு மனிதன் தன் முயற்சியால் வியாபாரம் செய்து பொருள் ஈட்டுவதைக் கண்டால், நாமும் அப்படி முயன்று பொருளை ஈட்ட வேண்டும் என்ற அவா நமக்கு உண்டாகும். இது மனித இயல்பு.

பொருள் ஈட்டுவதில் ஆர்வம் உண்டாவது போல அருளை ஈட்டுவதிலும் ஆர்வம் எழ வேண்டும். பொருளை ஈட்டி வைத்தவரைக் கண்டு நமக்கும் ஆர்வம் எழுகிறது. அவரிடம், "நீங்கள் எப்படிப் பொருள் சம்பாதித்தீர்கள்? அந்த வழியை எனக்கும் சொல்லிக் கொடுங்கள்" என்று கேட்கிறோம். அவர் சொன்ன வழியைக் கடைப்பிடித்து நாமும் பொருளாளனாக முயல்கிறோம்.

இத்தகைய முயற்சி அருள் ஈட்டுவதிலும் இருக்க வேண்டும். அருளை ஈட்டி அனுபவிப்பதோடு, அதைப் பிறரும் பெற வேண்டும் என்ற கருணையுடைய குருநாதரைத் தேடிக் கண்டுபிடித்து அடைய வேண்டும். பொருள் ஈட்டுபவர் நிரம்பிய உலகத்தில் அருளை ஈட்டியவர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள். பொருள் உடையவர்கள்கூட மிகச் சிலரே. அவரைவிட மிக மிகச் சிலரே அருள்நிதியைப் பெற்றவர்கள்.

பொருளைச் சேமிக்க வேண்டும் என்ற ஆவல் மனிதர்களுக்கு இருக்கிறது. அதற்காக எத்தனையோ வகையில் முயற்சியை மேற்கொள்ளுகிறார்கள். எத்தனை இடையூறுகள் வந்தாலும் பொருட்படுத்தாமல் இடைவிடாமல் முயற்சி செய்கிறார்கள். அவரவர் நிலைக்கு ஏற்றபடி இந்த முயற்சி இருக்கும். பிச்சைக்காரனும் தொழிலாளியும் வியாபாரியும் பெரிய செல்வர்களும் மேலும் மேலும் பொருளை ஈட்டுவதில் கவனத்தைச் செலவழிக்கிறார்கள். அழியும் பொருளைப் பெறுவதற்கே இத்தனை வகையாகச் சிரமப்படும்போது, என்றும் அழியாத அருளைப் பெற மிகுதியான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் அல்லவா? அருள் பெறும் வழியைக் காட்டும் குருநாதரைத் தேடிச் சரணடைந்தால் அவர் நமக்கு இன்னது தக்க நெறி என்று காட்டுவார்.

பொருள் படைத்த செல்வரை அண்டினால் அவர் தாம் பொருள் பெற்ற வழியைத் தெளிவாக அறிவிக்கத் தயங்குவதும் உண்டு. தம்முடைய பொருளைப் பகிர்ந்து கொடுக்கும் மனம் அவருக்கு இராது. குருநாதரோ அத்தகையவர் அல்லர். தாம் பெற்ற அருளனுபவத்தைப் பிறரும் பெற வேண்டும் என்ற கருத்தை உடையவராக இருப்பார். பொருளுடையவன் தன் பொருளுக்குக் குறைவு வருமோ என்று அஞ்சி அதை வெளிக்காட்டாமல் மறைத்து வைப்பான். அருளுடைய குருநாதரோ தக்கவர்கள் எவ்வளவு பேர் வந்தாலும் அவர்களும் அருட்செல்வத்தைப் பெறும்படி அனுக்கிரகம் செய்வார். அவர் அப்படிச் செய்வதால் அவர்களுடைய அனுபவம் குறைவதில்லை.

குரு என்ற சொல்லுக்கு அறியாமையை நீக்குபவர் என்பது பொருள். அறியாமையைப் போக்கி மெய்யறிவை உணர்த்தும் பரமோபகாரத்தைச் செய்பவர் அவர். கொடுக்கக்

கொடுக்கக் குறையுறாதது அருட்செல்வம். ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகளை ஏற்றுவதனால் மூல விளக்கின் ஒளி மங்கிவிடாது. ஒரு விளக்கினால் நூற்றுக்கணக்கான விளக்குகளை ஏற்றிக்கொள்ளலாம். ஒரு குருநாதர் இருப்பாரானால் அவரால் ஞான ஒளி பெறுவதற்கும் பலர் வரலாம்; ஒளி பெறலாம்.

கடவுள் எங்கும் இருக்கிறார். நம் உள்ளத்துக்குள்ளும் இருக்கிறார். ஆனால் நாம் அவரை உணர்ந்துகொள்வதில்லை. பல சமயங்களில், கடவுள் என்று ஒருவர் இருப்பது உண்மைதானா என்ற சந்தேகங்கூட நமக்கு உண்டாகிவிடும். உலகம் நியதி தவறாமல் நடப்பதற்காகக் கடவுள் என்ற ஒன்றைக் கற்பனை செய்து பெரியவர்கள் வைத்திருக்கிறார்கள் என்றுகூடத் தோன்றலாம். பாற்கடல், காமதேனு, கற்பகம், சிந்தாமணி என்பவற்றைப் புராணங்களில் படித்து அறியும்போது அவற்றை உண்டென்று நம்புகிறோம்; சில சமயங்களில் கற்பனை என்று கூட எண்ணத் தோன்றுகிறது. காரணம், அவற்றுக்கும் நமக்கும் நேரான தொடர்பு இல்லாததுதான். அது போலக் கடவுள் என்ற பொருளும் உண்டு என்று தெரிந்துகொள்கிறோமே அன்றி அதை அனுபவத்தில் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. அதனால்தான் கடவுள் உண்டு என்பது பற்றிக்கூடச் சந்தேகம் எழுகிறது.

பசுமாட்டைப் பற்றிப் புத்தகத்தில் படித்தும், படத்தில் பார்த்தும் ஒருவன் தெரிந்து கொண்டால் அவனுக்கு அதன் இயல்பு முழுவதும் தெரியாது. அதை நேரிலே கண்டு பாலைக் கறந்து குடித்தால்தான் பசுவினால் உண்டாகும் இன்பத்தை உணர முடியும். பசுவை உடையவன் நம்மைப் பசுவினிடம் அழைத்துச் சென்று பால் கறந்து கொடுத்து உண்ணச் செய்தால், பசுமாடு வெறும் அறிவுக்கு மட்டும் உரியதன்று, அனுபவத்துக்கும் உரியது என்பது தெரியவரும். குருநாதர் அந்த அனுபவத்தை நமக்குக் காட்டிக் கொடுக்கலாம்.

இறைவன் திருவருள் பயன்படாமல் இருந்தால், இறைவன் இருப்பதற்கே பொருள் இல்லை. குருநாதர் தம் அனுபவத்தால், இறைவனை உணர்ந்து நமக்கும் காட்டி அவனால் விளையும் அருளனுபவத்தை நாம் பெறச் செய்கிறார். குருநாதர் இறைவனுக்கும் நமக்கும் இணைப்புச் சங்கிலி போல இருக்கிறார். அவரால் இறைவனே வெறும் சூன்யமாக இல்லாமல் பயன்படுகிறான். நாமும் பயனடைகிறோம். பால் சுரக்கும் பசுவைச் சும்மா கட்டிப் போட்டால் அது வீணாகிவிடும். அதைக் கறந்தால் பசு என்பதற்கு உரிய தன்மையைப் பெறும். அந்தப் பாலைக் குடிப்பதனால் நாமும் பயன் பெறுகிறோம். பாலைக் கறந்து தருகிறவன் ஒரு வகையில் பசுவுக்கும் நலம்செய்து நமக்கும் நலம்புரிகிறான். குருநாதரும் கடவுளைப் பயனளிக்கச் செய்தும், நாம் பயன்பெறச் செய்தும் இடைநின்று நலம் செய்கிறார். குருவினாலே கடவுள் உண்டென்பதை உணர்ந்துகொள்கிறோம். கடவுளுக்கும் நமக்கும் இடையில் நின்று இருவரையும் செயற்படுத்தும் அற்புதமான காரியத்தைச் செய்கிறவர் குரு. ஆகையால் குருநாதனிடம் பரிபூரண நம்பிக்கை வைத்தால், நாம் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும் திருவருளனுபவத்தை நாம் பெறச் செய்வார்.

கடவுள் இல்லை என்று சொல்பவர்களுக்கும் ஒரு குரு இருப்பார். ஆகவே, குரு இல்லாமல் எந்த மார்க்கமும் புலப்படாது.

தெய்வம் கண்ணுக்குப் புலப்படாது. அவனைப் பரஞ்சோதி என்பார்கள். அந்தச் சோதியே சூரியனாகவும் சந்திரனாகவும் இருந்து ஒளி தருகிறான். சூரிய சந்திரர்களை நாம் வேண்டிய காலத்தில் வேண்டிய இடத்தில் கொண்டுவர முடியாது. பரஞ்சோதியாகிய கடவுள் சில காலங்களில் திருவவதாரம் செய்கிறான். இராமனாகவும் கிருஷ்ணனாகவும் இராம கிருஷ்ணனாகவும் வருகிறான். ஆனால் நாம் விரும்பும் காலத்திலோ இடத்திலோ அந்த அவதார மூர்த்திகள் வருவதில்லை.

ஒளியைத் தரும் விளக்கும் இருட்டைப் போக்குகிறது. சூரிய சந்திரர்களைப் போல நம் கைக்கு அகப்படாமல் இருப்பதில்லை. எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் நாம் அதனால் பயன் பெறலாம்.

இறைவன் சோதியாக இருக்கிறான்; அவனுடைய அவதாரங்கள் சூரிய சந்திரர்களைப்

போன்ற சுடர்களாக இருக்கின்றன. ஆனல் குருநாதரோ கைவிளக்கைப் போல் இருக்கிருர். எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் நமக்கு அருளை வழங்க வருகிருர்.

இறைவனே குருநாதராக வருகிருன் என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

> "அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
> குருபர ஞகிய கொள்கையைச்
> சிறுமை என்று இகழாதே"

என்பது திருவாசகம்.

ஆகவே, பரஞ்சோதியைக் கண்டு பயன் படுவது மிக அரிது; அவதாரமூர்த்திகளால் நலம் பெறுவதும் எளிதன்று. ஆனல் குரு நாதருடைய திருவருளோ என்றும் கிடைக்கும்; எங்கும் கிடைக்கும். வானத்திலுள்ள மேகத்தி லிருந்து மழை பொழிய, அது ஆருக ஓட, அந்த ஆற்றிலிருந்து நீரைத் தேக்கிக் குழாய் வழியாக நம் வீட்டிற்கு நீரைக் கொண்டு வருகிறேம். அது வருகிற கருவியைக் கொண்டு குழாய்த் தண்ணீர் என்று பெயர் பெற்ருலும், அது மேகத்திலிருந்து வந்த நீர்தான். அவ்வாறே குருநாதர் மானிடச் சட்டை சாத்தி வந்ததனல், 'இவரும் நம்மைப் போன்ற மனிதர்' என்று எண்ணக் கூடாது. 'பரப்பிரம்மமாகிய கடவுள் இந்த வடிவத்தில் வந்து தன் கருணையை வழங்குகிறது' என்று கொள்ள வேண்டும்.

இத்தகைய நம்பிக்கையோடு, உண்மையான அனுபூதிமான்களாகிய குருநாதரை அண்டினல் நமக்கு நிச்சயம் அருள் அமுதம் கிடைக்கும்.

புதிய புத்தகங்கள்

1. விவேக சூடாமணி

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய விவேகசூடாமணி நூல். தமிழில் பொழிப்புரையோடும் அவசியமான விளக்கங்களோடும் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

[தமிழாக்கம் : ஹரிணி, வெளியிட்டோர் : ஹரி கிருஷ்ண சதனம், 3, அப்பாகண்ணு முதலி தெரு, ராயப்பேட்டை, சென்னை-600 014. பக்கம் 110. விலை : ரூ. 3-50. தபால் செலவு 60 காசு]

2. சிவயோகம் அல்லது ஆறெழுத்தந்தாதி

அகஸ்திய மாமுனிவர் அருளிய இந்த ஆகமநூல், மந்திர யந்திர ஆதார ரகசியங்களை விளக்குகிறது.

[உரையாசிரியர் : ப. க. நல்லசாமி, வெளி யிட்டோர் : திருமேனி வாசகசாலை, பவானி-638301. பக்கம் 75. விலை ரூ. 3]

3. மகா பிரதோஷ மகிமை

சாண்டில்ய முனிவர் அருளிய பிரதோஷ மகிமை, கதை, சிவலிங்க மாகாத்மியம், நந்தி கேச்வரர் வைபவம், சக்தி தரும் வீரட்டானத் தலங்கள், பூஜைமுறை ஆகியவை அடங்கியது.

[ஆசிரியர் : நாகர்கோயில் கிருஷ்ணன், வெளியிட்டோர் : கிரி டிரேடிங் ஏஜன்ஸி, 10, கபாலீச்வரர் சன்னிதி தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004. பக்கம் 72. விலை : ரூ. 2]

4. ஸ்ரீ சந்தோஷி மாதா

சந்தோஷி மாதா விரதம், கதை, பூஜை முறை, அஷ்டோத்தரம் ஆகியவை அடங்கியது.

[ஆசிரியர்கள் : ஸ்ரீநிவாஸாசாரியார், புலவர் நாகசண்முகம். வெளியிட்டோர் : கிரி டிரேடிங் ஏஜன்ஸி, சென்னை-600 004. பக்கம் 58. விலை : ரூ. 2]

5. யஜுர்வேத ஸந்தியாவந்தனம்

[வெளியிட்டோர் : கிரி டிரேடிங் ஏஜன்ஸி, சென்னை-600 004. விலை ரூ. 1-50]

6. சோலைமலைக் குறவஞ்சி


ஜம்புலி புத்தூர் கிருஷ்ண ஐயங்கார் இயற்றிய வைணவ நூல்.

[உரையாசிரியர் : அலங்காரம் தேவராஜன். பதிப்பாசிரியர் : எஸ். கிருஷ்ணஸ்வாமி, 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017. பக்கம் 186. விலை ரூ. 3-50. தபால் செலவு 50 காசு]

7. ஆண்டாள் சந்திரகலாமாலை

ஸ்ரீவில்லிபுத்தூர் வில்லிஸ்வாமி இயற்றியது.

[உரையாசிரியர் : அலங்காரம் தேவராஜன். பதிப்பாசிரியர் : எஸ். கிருஷ்ணஸ்வாமி 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017. பக்கம் 50. விலை ரூ. 2. தபால் செலவு 40 காசு.]



உயர்ந்த உள்ளம்

ஆர். ரங்கநாதன்

பக்தி

ஒரு சமயம் ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது ஒரு தெருவில் சிறுவர் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் ஒரு விக்கிரகத்தை வைத்துக்கொண்டு, கோவில்களில் நடக்கும் தெய்வ வழிபாடுகளைப் போலச் செய்து விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். தாங்கள் தெய்வத்துக்கு முன்னால் நின்றுகொண்டிருப்பதாகவே நினைத்து அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் ராமானுஜரின் சீடர்களில் ஒருவர், "ஆசார்யருக்கு வழி விடாமல் இப்படியா நின்றுகொண்டிருப்பது? நகர்ந்து போங்கள்!" என்று அந்தச் சிறுவர்களைக் கண்டித்தார்.

அவர் அதட்டியதைக் கேட்ட ஒரு சிறுவன் சுருக்கென்று, "உங்களுக்கு உங்கள் ஆசார்யர் உயர்ந்தவராக இருந்தால், எங்களுக்கு நாங்கள் இப்போது இங்கே வைத்துப் பூஜித்துக் கொண்டிருக்கும் தெய்வம் அவரைவிட உயர்ந்தது!" என்றான்.

சிறுவனின் பதிலைக் கேட்டு ராமானுஜரின் உள்ளம் உருகியது, ராமானுஜர் அந்தப் பையன்களுடன் பூஜை முடியும் வரை இருந்து, கடைசியில் சிறுவர்கள் தந்த பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகுதான் மேலே சென்றார்.

பணிவு

ஒரு சமயம் காஞ்சீபுரத்திலிருந்து, கோவிலைச் சேர்ந்த சில மரியாதைப் பொருள்களைத் திருப்பதிக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. அந்தச் சமயத்தில் அவற்றை எடுத்துச் செல்வதற்கு உரிய தக்க பணியாள் எவரும் அங்கில்லை. உடனே சற்றும் தயங்காமல் ராமானுஜரே அந்தக் கோவில் மரியாதைப் பொருள்களைத் திருப்பதிக்கு எடுத்துச் செல்லும் பணியை மேற்கொண்டார்.

நீண்டதும் சிரமம் தருவதுமாகிய பயணத்தை, புகழ் வாய்ந்த மகானுகிய ராமானுஜர் தாமே வலிய மேற்கொண்டு, கோவில் பொருள்களைத் திருமலை நம்பியிடம் கொண்டு சேர்த்தார்.

பிரசித்தி பெற்ற புண்ணிய புருஷரான ராமானுஜரின் செயல், திருமலை நம்பியை வியப்பில் ஆழ்த்தியது. எனவே அவர், "இந்தப் பணியைத் தாங்கள் எதற்கு மேற்கொள்ள வேண்டும்?" என்று ராமானுஜரை வினவினுர்.

அதற்கு ராமானுஜர், "என்னைக்காட்டிலும் தாழ்ந்தவர் யாரேனும் இருப்பின் அவரிடம் இந்தப் பணியை ஒப்படைக்க நினைத்தேன். ஆராய்ந்து பார்த்தபோது என்னைவிடச் சிறியவர் எவரும் இல்லை என உணர்ந்ததனுல் நானே இந்தப் பணியை மேற்கொண்டேன்" என்று பதில் கூறினுர்.

ஸ்ரீராமானுஜரின் இந்தப் பணிவு, பகவத் பக்தியில் முதிர்ந்தவருக்கே உரிய ஓர் லட்சணமாகும்.

குருபக்தி

எம்பார் என்ற ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர் தமது குருவாகிய திருமலைநம்பிகளுக்குப் படுக்கை போட்டுவிட்டு, உடனே அந்தப் படுக்கையில் ஒரு தடவை புரண்டு எழுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவரது செயலைக் கண்டு ராமானுஜர் கலங்கினுர். தாம் கண்டதை ராமானுஜர் நம்பிகளிடம் விண்ணப்பித்தார்.

நம்பிகள், "என் படுக்கையில் நீ தினமும் புரண்டு எழுந்திருப்பது மகா அபசாரமாகும். இதன் பலனை நீ அறிந்தாயா?" என்று எம்பாரிடம் வினவினுர்.

அதற்கு, "இந்த அபசாரத்திற்கு எனக்கு நரகம்தான் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். என்ருலும் ஆசார்யரின் திருமேனியில் நோவு உண்டாக்கக் கூடாது என்பதற்காக அவ்விதம் சோதித்துப் பார்த்துச் சரியானபடி படுக்கையை ஏற்பாடு செய்கிறேன்" என்று எம்பார் பணிவுடன் தெரிவித்தார்.

இதைக் கேட்டு எம்பாருடைய குருபக்தியை ராமானுஜரும் திருமலை நம்பியும் மிகவும் புகழ்ந்தார்கள்.

கடவுள் சாப்பிடுகிருரா?

'நைவேத்தியம் செய்தால் பகவான் எங்கே சாப்பிடுகிருர்?' என்று சிலர் கேலியாகக் கேட்கிருர்கள்.

நிவேதனம் என்ருல் சுவாமியைச் சாப்பிடச் செய்வது என்று பொருளல்ல. 'நிவேதயாமி' என்ருல் 'அறிவிக்கிறேன்' என்று பொருள்.

"பகவானே! இந்த வேளைக்கு உன் கருணையால் இந்த உணவு எனக்குக் கிடைத்திருக்கிறது" என்று கடவுளுக்குத் தெரிவித்துவிட்டு, அவர் நினைவோடு உண்ண வேண்டும்.

பகவான் கொடுத்ததை அவருக்குக் காட்டாமலே நாம் அனுபவித்தால் திருடர்களாவோம்.

—ஒரு சாது

தென்திசைக் கடவுள்

எம். கோவிந்தராஜ்

சிவபெருமானின் ஒரு கையில் மானும், இன்னொன்றில் அக்கினியும், மூன்றாவது கையில் சூலமும், நான்காவது கையில் உடுக்கையும் இருக்கின்றன. ஐந்து அரவங்களை அணிகலன்களாகவும், கழுத்தில் மண்டையோடுகளை மாலையாகவும் அவர் அணிந்திருக்கிறார். மாயை என்ற அரக்கன் அவருடைய காலடியில் அழுந்திக் கிடக்கிறான். இந்தக் கோலங்களுடன் அவர் தென்திசையை நோக்கி நின்றுகொண்டிருக்கிறார்.

இவ்வாறு தட்சிணாமூர்த்தி வடிவமாகச் சிவபெருமான் நமக்குத் தரும் காட்சியின் இரகசியத்தையும் அதன் உண்மையான உட்பொருளையும் உணர்ந்தவர்கள் மிகச் சிலரே எனலாம்.

இறைவனின் படைப்பு, பொருளற்றதல்ல. உலகில் நடைபெறும் வியக்கத்தகு செயல்களெல்லாம் இறைவனின் திருவிளையாடல்களே. இறைவனின் ஒவ்வொரு திருவிளையாட்டிற்கும் சிறப்பான உட்பொருள் உண்டு. இறைவனின் ஒவ்வோர் அவதாரத்திற்கும் அவருடைய உருவம் மற்றும் வேடங்களுக்கும் உட்பொருள் உண்டு.

'சிவபெருமான் தென்திசை நோக்கி, தட்சிணாமூர்த்தியாக நின்று காட்சி தருவது ஏன்?' என்பதுபற்றி ஆராய்வோம்.

திசைகள் எட்டு என்றும், அவற்றைப் பாதுகாப்பவர்கள் அஷ்ட திக்பாலகர் என்றும் எல்லோரும் அறிந்திருப்பர். ஆனால் அவர்களைப் பற்றிய விவரங்களை எல்லோரும் அறிந்திருக்க மாட்டார்கள். எனவே முதலில் அஷ்ட திக்பாலகர்களைப்பற்றி அறிந்துகொள்வோம்.

திசையின் பெயர்	திக்பாலகரின் பெயர்
1. கிழக்கு	இந்திரன்
2. மேற்கு	வருணன்
3. தெற்கு	யமன்
4. வடக்கு	குபேரன்
5. தென்கிழக்கு	அக்கினி
6. தென்மேற்கு	நிர்ருதி
7. வடகிழக்கு	ஈசானியன்
8. வடமேற்கு	வாயு

இதிலிருந்து, தென்திசைக்கு அதிபதி யமராஜன் என்றும், தென்திசையிலே அமைந்திருப்பது யமலோகம் என்றும் தெரிய வருகிறது.



இவ்வுலகத்து மக்கள் அனைவரும் அறியாமை எனும் இருளில் மூழ்கி மாயையே உண்மையென எண்ணி அந்தக் கானல்நீருக்குப் பின்னால் பைத்தியமாகித் திரிந்துகொண்டிருக்கின்றனர். இவ்வாறு அவர்கள் தங்களது பாவச் செயல்கள் மூலம் நரகத்திற்கு உரியவர்களாக ஆகிவிடுகின்றனர்.

யமலோகத்தை நோக்கிச் செல்ல இருக்கும் பாவிகளைத் தடுத்து நிறுத்துவதற்காகவே சிவபெருமான் தென்திசை நோக்கி, தட்சிணாமூர்த்தியாக நின்றுகொண்டிருக்கிறார்.

தட்சிணாமூர்த்தி தென்திசை நோக்கி நின்றுகொண்டிருப்பதனால், தென்திசையை நோக்கிச்

செல்கிற எல்லா மானிடர்களையும் அவரால் எளிதில் பார்க்க முடிகிறது. தட்சிணாமூர்த்தியைப் பார்த்த மாத்திரத்திலேயே ஞானிகள் சத்தியஞானத்தைப் பெற்றுப் பாவத்திலிருந்து நீங்கி, முக்தியை நோக்கி முன்னேறுகின்றனர்.

ஆனால் அறிவிலிகளோ, தட்சிணாமூர்த்தியைத் தரிசித்த பின்புங்கூட அவரிடத்தில் கவனம் செலுத்தாமல் மாயையின் பின்னேகித் தென் திசையில் முன்னேறிச் செல்கின்றனர்.

அப்பொழுது இறைவர் தட்சிணாமூர்த்தி தமது ஒரு கையிலிருக்கும் உடுக்கையை அடித்து ஒலி எழச் செய்கிறார். மிகுந்த ஓசையுடன் உடுக்கையின் ஒலி எழும்பும்பொழுது தென் திசை நோக்கி முன்னேறிச் செல்லும் மாந்தர் ஒரு நொடிநேரம் தயங்குகின்றனர்; சற்றுப் பின்னால் திரும்பி வடக்கே பார்க்க ஆரம்பிக்கின்றனர்.

வாத்திய ஒலியினால் கவரப்படுதலும் மக்களின் கவனம் ஈர்க்கப்படுவதும் இயற்கையே. இந்தக் காரணத்தினால்தான் திருமணம் மற்றும் மரண நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது பலதரப்பட்ட வாத்தியங்கள் தொன்று தொட்டு வாசிக்கப்பட்டு வருகின்றன. திருமணத்திற்கு மங்கல வாத்தியங்கள் என்றால் மரணத்திற்கு வேறுபட்ட வாத்தியங்கள் முழங்கப்படுகின்றன.

இக்காலத்திலும் கிராமங்களில் யாருடைய வீட்டிலேனும் துயரச் சம்பவம் நிகழ்ந்து விட்டால் உடனே அதற்கு உரிய வாத்தியம் முழங்கப்படுகிறது. ஒலியைக் கேட்டதும் ஊர்ஜனங்கள் அது யாருடைய வீடு என்பதைத் தெரிந்துகொண்டு உடனே அங்கே போய்ச் சேருகின்றனர்.

நகரங்களிலுங்கூடத் தெருக்களில் ஏதேனும் வாத்தியம் ஒலித்தால், பெரியவர்களானாலும் சிறியவர்களானாலும் சரி, செய்துகொண்டிருக்கும் வேலையை அப்படியே விட்டு ஓடிவந்து பார்ப்பார்கள். ஏன், உறங்கிக்கொண்டிருப்பவர்கள்கூட வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து வந்து பார்ப்பார்கள், வெளியே என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள. இதனால் தான் சாதாரணப் பிச்சைக்காரன்கூட ஏதேனும் தாளத்தைத் தட்டிக்கொண்டே வீடு தோறும் யாசிக்க வருகிறான்.

வாத்தியம் என்பது மக்களைத் தன் பக்கம் கவரக்கூடிய கருவியாகும். சிவபெருமானின் கையிலுள்ள உடுக்கையும் இது போன்ற கருவி தான். அந்த உடுக்கை ஒலிக்கும்பொழுது, வீழ்ச்சி மற்றும் அழிவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் மானிடர்களைப் பார்த்து, "ஏ மானிடர்களே! வாருங்கள்! வாருங்கள்! வடதிசை நோக்கி வாருங்கள்! முக்தி என்ற மாளிகை வடக்கே இருக்கிறது. அங்கு உங்களை அனுப்புவதற்குத்தான் சிவபெருமான் இங்கே நின்றுகொண்டிருக்கிறார்" என்று கூறுவது போல் தோன்றுகிறது.

உடுக்கையின் ஒலியால் கவரப்பட்ட மக்கள் இப்பொழுது தென்திசையில் முன்னேறுவதை விட்டு, வடக்கு நோக்கி மெல்ல மெல்லச் செல்லத் துவங்குகின்றனர். இருப்பினும் அவர்களுடைய மனதில் சிறிது ஐயம் இருக்கத் தான் செய்கிறது. அப்பொழுது சிவபெருமான் தமது கைகளிலிருக்கும் ஆயுதங்களையும் தலை கை மற்றும் மார்பிலுள்ள அணிகலன்களையும் காண்பித்துத் தமது உருவத்திற்கு உரிய உட்பொருளை உணர்த்துகிறார். மாயையின் பிடியிலிருந்து நிரந்தரமாக விடுபட்டுள்ளவரான இறைவன், சாதாரண மானிடர்களிடம் அருள்கூர்ந்து அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டே சிவவேடம் தாங்கி, தட்சிணாமூர்த்தியாக நின்றார் என்று ஞானிகளும் அறிஞர்களும் கூறுவர்.

தட்சிணாமூர்த்தி தமது கையிலுள்ள உடுக்கையை ஒலித்து மக்களைத் தம் பக்கம் அழைக்கிறார்; அவர்களைப் பார்த்து அவர் கூறுகிறார்: "என் கையிலுள்ள இந்த மானைப் போல உங்கள் மனம் நிலையற்று இருக்கிறது. எவ்வாறு மான் நிலையற்று இருக்கிறதோ அவ்வாறே மனிதர்களாகிய நீங்கள், மனமும் நிலையற்று நாற்புறமும் சூழ்ந்துள்ள மாயை உண்மையே என எண்ணி, அதன்பின்னாலேயே அலைந்து திரிந்து இறுதியில் உங்கள் அழிவை நீங்களே தேடிக்கொள்கிறீர்கள்!"

இறைவன் மேலும் கூறுகிறார்: "இந்த மானைப் போலச் சலனப்படும் உங்கள் மனதை

என்னிடத்தில் கொண்டு வாருங்கள். நான் அதை என்னிடமுள்ள தீயினால் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடுவேன். என்னிடத்தில் வந்து என் பேச்சைக் கேளுங்கள். என் கைகளிலும் காதுகளிலும் தலையிலும் நான் அணிந்துகொண்டிருக்கும் இந்த ஐந்து அரவங்களும் உங்கள் உடலிலே பிராணம் அபானம் வியானம் உதானம் ஸமானம் என்ற ஐந்து வாயுக்களாகி, உங்கள் மூக்குத் துளைகளின் வழியே நடனம் புரிந்துகொண்டிருக்கின்றன. மனிதர்களின் உடலிலே மூச்சு என்பது பாம்பாக இருந்தால் இந்த உலகின் ஞானிகள் பாம்பாட்டிகளாக இருக்கின்றனர்.''

“எவ்வாறு பாம்பாட்டி பாம்பைத் தன் வசப் படுத்தி ஆட்டுவிக்கிறானோ அவ்வாறே யோகி தன் மூச்சை அடக்கித் தன் கட்டுப்பாட்டிலே வைத்துக்கொண்டால், பல பிறவிகளாக அவனைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் மாயை என்ற அரக்கனைப் பிடித்து என் கால்களின் கீழே போட்டு மிதித்துக் கொன்றுவிடுவேன்'' என்று சிவபெருமான் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது: “தனது மூச்சை அடக்கிக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனுடைய மனமென்னும் வாயுவை எனது சூலத்தினால் குத்தி, அதை என்னிடத்திலிருக்கும் தீயினால் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடுவேன்; அந்தச் சாம்பலை என் உடலிலே பூசிக்கொண்டு அவனுடைய மண்டையோட்டை மாலையாகக் கோத்து அதையும் என் கழுத்திலே அணிந்துகொள்வேன்; இதனால் அந்த வாயு மீண்டும் அந்த மண்டையோட்டில் நுழையாமற் செய்துவிடுவேன்.''


இந்த உண்மையை உணர்த்துவதற்காகத்தான் சிவபெருமான் பாம்புகளையும் மண்டையோடுகளையும் அணிகலன்களாக அணிந்துகொண்டிருக்கிறார். இதே தத்துவத்தைத்தான் நம் முன்னோர் விக்கிரகங்களின் வாயிலாக நமக்கு உணர்த்திச் சென்றிருக்கின்றனர்.

எவ்வாறு பாம்பு சீறுகிறதோ அவ்வாறே மனித உடல்களில் சுவாசம் நடைபெறுகிறது. சுவாசம் என்ற இந்தப் பாம்பை வெளியில் விட்டு விடாமல் நம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதற்குத்தான் முறைப்படிப் பிராணாயாமம் செய்துவர வேண்டும். இவ்வாறு யார் பிராணாயாமம் செய்கிறார்களோ அவர்களுடைய மனதைத்தான் இறைவன் தன் திரிசூலத்தால் கொன்று, தன்னிடம் இருக்கும் தீயினால் எரித்து அதைச் சாம்பலாக்கிவிடுகிறான். அதே சாம்பலைத்தான் அவன் தன் உடல் முழுவதும் பூசிக்கொள்கிறான். அவர்களுடைய மண்டையோடுகளைக் கழுத்தில் மாலையாக அணிந்துகொள்கிறான். இதனால் அவர்களுடைய மண்டையோடுகளில் மீண்டும் மூச்சுகள் நுழைய முடிவதில்லை.

இவ்வாறு தட்சிணாமூர்த்தி வடிவான சிவபெருமானின் உருவத்தை அறிந்துகொண்டு எவனொருவன் ஒருமித்த மனதுடன் அவரைத் தியானம் செய்கிறானோ அவன் ஐயமின்றி வீடுபேற்றினைப் பெறுவான் என்பது உறுதி.

எனவேதான், ''வாழாது வாழ்ந்தாலும் வடக்கே தலைவைத்துத் தெற்கே கால்நீட்டிப் படுத்துறங்கலாகாது'' என்று முன்னோர் கூறியுள்ளனர்.

நெப்போலியன்



ஒரு சமயம் சக்கரவர்த்தி நெப்போலியன் ஒரு பணக்காரச் சீமாட்டியுடன் பாரிஸ் தெருக்களில் நடந்துகொண்டிருந்தார்.

வழியில் ஒரு தொழிலாளி பெரிய பாரம் ஒன்றைத் தலையில் தூக்கிக்கொண்டு எதிரே வந்துகொண்டிருந்தான். சீமாட்டி அவனைப் பார்க்காதது போல அவனுக்கு வழி விடாமல் நடந்து சென்றாள்.

அதைக் கண்ட நெப்போலியன், “அம்மா, உழைப்புக்கு மதிப்புக் கொடுங்கள். அந்த ஆளுக்கு வழி விடுங்கள்'' என்று சொல்லித் தாமும் வழி விட்டார்.

— நாடோடி

மகாபாரதத்தில் சில கருத்துக்கள்

1. நெருப்பு ஜ்வாலைகளினால் தகிக்கிறது; சூரியன் கிரணங்களால் தகிக்கிறான்; ராஜா தண்டனையால் தகிக்கிறான்; உத்தம மனிதன் கோபத்தினால் தகிக்கிறான்.

2. ஒரு குலத்திற்காக ஒருவனை விட வேண்டும். ஒரு கிராமத்திற்காக ஒரு குலத்தை விடவேண்டும். ஒரு தேசத்திற்காக ஒரு கிராமத்தை விடவேண்டும். தனக்காக (ஆத்மா முக்தி பெற) பூமியையே விடவேண்டும்.

3. பெரியோர் இல்லாதது சபையன்று; தர்மத்தைச் சொல்லாதவர் பெரியோரும் அல்லர்; உண்மை இல்லாதது தர்மமும் அன்று; கபடம் சேர்ந்தது உண்மையும் அன்று.

(தன்னைத் துச்சாதனன் சபைக்கு இழுத்து வந்து அவமானப்படுத்தியபோது, திரௌபதி சபையோரிடம் தர்மத்தைச் சொல்லும்படி கேட்டபோது சொன்னது இது.)

4. தருமர் கூறியது: பொன்மயமான மிருகம் இருப்பதில்லை. என்றாலும் ராமர் பொன் மானின் மேல் ஆசைப்பட்டார். கஷ்டம் நெருங்கின காலத்தில் புத்தியும் மிகவும் மாறிப்போகிறது.

5. தேவர்கள் எந்த மனிதனுக்குத் தோல்வியைக் கொடுக்கிறார்களோ அவனுடைய புத்தியைக் குறைத்துவிடுவார்கள். அவன் விபரீதங்களையே பார்ப்பான். கேடு நெருங்கி மதி கலங்கிப் போனபோது அநியாயம் நியாயம் போலத் தோன்றி மனதை விட்டு விலகாமல் இருக்கும்.

கேடு வருமுன் தீயவையெல்லாம் நல்லவை போலவும், நல்லவையெல்லாம் தீயவை போலவும் தோன்றும்.

இவனுக்கும் (துரியோதனனுக்கும்) அப்படியே தோன்றியிருக்கிறது என்பது நிச்சயம். கால மானது தண்டத்தை ஓங்கி யார் தலையையும் உடைப்பதில்லை. காரியங்களை மாறுகக் காண் பிப்பதுதான் காலத்தின் வண்ணம்.

6. புது வருமானம் இல்லாமல் செலவு செய்யப்படுமானால் இமயமலையானாலும் குறைந்துவிடுமன்றோ!

7. துரியோதனனிடத்தில் ராஜ்யம் இருப்பது நாய்த் தோற்பையில் பாலும், தீய ஒழுக்க முள்ளவனிடம் வேதமும், திருடனிடத்தில் சத்தியமும், கெட்ட ஸ்திரீயினிடத்தில் பலமும் இருப்பது போன்றது.

8. சிறந்த கைகளுள்ளவனே! காரிய மானது நன்கு ஆலோசிக்கவும் நன்கு நிச்சயிக் கவும் நன்கு தொடங்கவும் நன்கு செய்யவும் பட்டபோது தெய்வமும் அனுகூலமாகி விருப்பங்கள் நிறைவேறுகின்றன.

9. கங்கையானது வாக்கினால் சொல்லப் பட்டால் பாவம் செய்தவனைப் பரிசுத்தனாக்கு கிறது; பார்க்கப்பட்டால் மங்களத்தைக் கொடுக்கிறது; ஸ்நானம் செய்யப்பட்டாலும் ஏழு தலைமுறை வரையில் குலத்தைச் சுத்தியடையச் செய்கிறது.

10. பெரிய சண்டைகளைச் செய்து பகைவர்களை வென்று மிகுதியாகப் பொருளை யடைந்து பூமி முழுவதையும் ஜயித்தும் இந்த உலகில் கற்றறிந்தவர்கள் தங்களைப் புகழ்ந்து கொள்ளுகிறதில்லை. அக்கினி வாயினால் சொல்லாமலே பதார்த்தங்களைப் பக்குவம் செய்கிறான். சூரியன் பேசாமலே பிரகாசிக் கிறான். பூமி சராசரங்களுள்ள உலகங்களைப் பேசாமலே தாங்குகிறது.

11. புண்ணியமும் பாவமும் இவற்றைச் செய்தவனுக்கு முந்திப் பரலோகம் போகின்றன. இவைகளைச் செய்பவன் பின்னே தொடர்கிறான்.

12. சான்றோர்களிடம் சத்தியம் நிலை பெற்றுள்ளது. சாதுக்களிடம் வணக்கம் நிலை பெற்றுள்ளது. திறமைசாலிகளிடம் செல்வம் நிலைத்திருக்கிறது. ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஜயம் நிச்சயம்.

13. ஒவ்வொரு நாளும் சோகத்திற்கிடமான ஆயிரங்களும் பயத்திற்கிடமான நூறுகளும் மூடனை அணுகுகின்றன; பண்டிதனை அணுகா.

14. இரண்டெழுத்து உள்ளது மரணத்தின் வழி ஆகும். மூன்றெழுத்து உள்ளது நிலைபெற்ற தாகிய பிரம்மத்தின் வழி ஆகும். மம (என்னுடையது) என்னும் இரண்டெழுத்து உள்ளது மிருத்யுவின் வழியாகும். ந மம (என்னுடையதல்ல) என்னும் மூன்றெழுத்து உள்ளது சாசுவதமான பிரம்மத்தின் வழியாகும்.

15. வீட்டைவிட்டு வெளிச்சென்ற சன்னி யாசிபோல இல்லறத்தவன் தன் வீட்டில் வசிக்க வேண்டும்.

16. நெருப்பு சிறிதானாலும் சுடுகிறது. விஷம் கொஞ்சமாயிருந்தாலும் கொல்லுகிறது.

17. பாலை விரும்புகிறவன் பசுவின் மடியை அறுத்தால் பாலைப்பெற முடியாது. அது போல, நீதிக்கு விரோதமாகப் பீடிக்கப்படும் ராஜ்யம் வளர்ச்சியடையாது. புல்லும் தண்ணீரும் ஆதரவும் இனிய சொல்லும் கொண்டு கறக்கும் பசுவைக் காத்து வரும் மனிதன் எப்போதும் பாலை அடைவது போல, நீதிப்படி ராஜ்யத்தைப் பரிபாலித்து வரும் அரசன் பயன் பெறுவான்.

யாகம், வேதம், பிறர் குற்றங்கூறாமை ஹிம்ஸை செய்யாமை, அதிதிபூஜை, அடக்கம், சத்தியம், தவம் இவையே சிறந்த மனிதனுக்கு உரிய லட்சணமாகும். 卐

ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர் : உண்மையைச் சொன்னால் பகவத் சாட்சாத்காரம் பெறுவதற்கு அதிக காலமே ஆவதில்லை. ஆனால் மனிதர்கள் 'தூங்கி வழிந்து விடுகிறார்கள்'—அதாவது பூர்வ வாசனைகள் அவர்களுக்கு மிகவும் வலிவாக இருக்கின்றன. ஆகையால் ஞான விழிப்புப் பெற முடியாதபடி அஞ்ஞான உறக்கத்தில் ஆழ்த்திவிடுகின்றன. எனவே ஒருவர் தமது சங்கல்ப சக்தி அனைத்தையும் திரட்டித் தம்மைத் தட்டி எழுப்பிக் கொள்ள வேண்டும் — சாதித்தே தீருவது அல்லது சாவது என்ற உறுதியோடு.

ஒருவன் ஒரு ஸ்திரீயைக் குறித்துக் கனவு காணலாம்; ஆனால் எப்போதும் எதிரிடை மனப்போக்கு பலமாக் இருப்பதனால் அவன் அந்தக் கனவிலும்கூட அவளிடம் வசியமாகாமல் கோபமே கொள்வான். அதாவது கனவிலும் அவன் உஷாராக இருக்கிறான். நாம் வெறும் யந்திரங்கள் அல்ல; எல்லா நிலையிலும் நாம் உஷாராக இருக்க முடியும். பரிபூரணத்துவம் பெறுவதில் ஒருவன் வெற்றி பெறுவானா மாட்டானா என்பது அவனுக்கு உள்ள அந்தரங்க விச்வாஸத்தைப் பொறுத்ததே. அதுதான் உரைகல்.

உனக்கு நீயே சாட்சி. ஏதாவது தவறு செய்யப்பட்டிருந்தாலும், 'நல்லது, இதுவரை போனதெல்லாம் போகட்டும். இனி இம்மாதிரியான தவறு எதுவும் செய்யமாட்டேன்' என்று சொல்லிக்கொள். அதே போல் அந்தச் செயலை நீ மறுபடி செய்யாமல் இருந்துவிட்டாயானால் அப்போதே உன் லட்சியத்தை எய்திவிடுகிறாய்.

எந்த ஒரு கெட்ட வாழ்க்கை முறையை மனம் கண்டித்தாலும் அதற்காக மனமாரப் பச்சாத்தாபப்பட்டு, அந்தத் தீமையைப் பின்பு செய்யாமலே இருக்க வேண்டும். கெட்ட செயல்களில் வெறுப்புத் தட்ட ஆரம்பித்தவுடனே ஒருவன் திடச்சங்கல்பத்தோடு அவற்றை நீக்கவேண்டும். அப்போது அவன் அவற்றின் தளையிலிருந்து விடுபட்டுவிடலாம். 'இதை நான் இனி ஒரு காலும் செய்ய மாட்டேன்' என்பதை ஒருவன் வெகு அழுத்தத்துடனும் தீர்மானத்துடனும் சொல்ல வேண்டும். பழைய பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டபோதிலும் ஒருவன் மறுபடி அவற்றைச் செய்வானாகில் ஒரு பலனும் விளையாது.

மேம்போக்காகக் குஷியோடு காலம் கடத்திக் கொண்டிருக்கிற மனப்பான்மை ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் பிடிக்காது. சுவாமிஜியைப் பற்றி அவர் சொல்வார்—"பாரேன், இவனுக்கு எத்தகைய தீர மனப்பாங்கு! எதிலாவது ஒன்றில் இவனுடைய மனம் ஈடுபட்டால் உடனே தன் இதயத்தையும் ஆன்மாவையும் முற்றிலும் அதனிடமே ஈடுபடுத்திவிடுகிறான்."

சந்தர்ப்பங்கள் அனுகூலமாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அதையெல்லாம் ஏன் லட்சியம் செய்ய வேண்டும்? காரியத்தை நிறைவேற்றுவதற்காகவே நமது ஒவ்வொரு நரம்பையும் தீவிரமாக முறுக்க வேண்டும். எதைக் கொடுத்தாயினும் எப்படியும் ஒன்றைச் சாதித்துவிடுவது என்ற உறுதியான தீர்மானம் உனக்கு இருக்க வேண்டும். அப்போது உனக்கு மிகவும் தடையான பெரிய இடையூறுகள் என்று நீ எண்ணியவையெல்லாம்கூட முடிவில் உனக்கு உதவி புரிவனவாகவே மாறிவிடுவதைக் காண்பாய். ஆனால் நீ மனமார்ந்த ஈடுபாட்டுடன் போர்புரிய வேண்டும். சந்தர்ப்பங்கள் எப்போதுமே எவனுக்காவது சாதகமாக இருக்குமா என்ன? இதைச் செய்ய வேண்டியது நம் கடமை என்பதையே கவனித்து முன்னேறிக் கொண்டிரு.

சந்தர்ப்பம் எப்படி இருந்தாலும் நீ எப்போதும் அழிவற்ற அமர வஸ்து அன்றோ?

எனவே நீ ஏன் அனுகூலச் சந்தர்ப்பத்தைத் தேடி அலைய வேண்டும்? இவை யாவும் உன்வெளிப் பாடுகளே. சந்தர்ப்பம் முதலிய புற விஷயம் யாவும் ஆத்மாவின் பிரதிபலிப்பே.

ய இச்சதி ஹரிம் ஸ்மர்த்தும்
வ்யாபாராஸ்தகதைரபி |
ஸமுத்ரே சாந்தகல்லோலே
ஸ்நாதுமிச்சதி துர்மதி : ||

“தன் அலுவல்களெல்லாம் முடிந்தபின் ஹரிஸ்மரணே செய்யலாம் என்று நினைக்கிறவன், அலைகள் யாவும் ஓய்ந்தபின் சமுத்திர ஸ்நானம் செய்யலாம் என்று எண்ணும் முட்டாளுக்கு நிகரே.”

கடலில் நீராடப் போனவன் காத்துக் காத்துப் பார்த்தாலும், அலைகள் எல்லாம் அடங்கியவுடன் முழுகலாம் என்று! பிதற்றல் தான்! அப்படி ஒரு வேளை என்றாவது வருமா? இப்படிச் செய்யாமல் அலைகளுக்குள்ளேயே எதிர்த்து அடித்துக்கொண்டு போய்த்தான் குளித்து வெளிவர வேண்டும். கடல் எப்போதும் ஒரேபோல்தான் இருக்கும். இந்த உலகத்திலும் அப்படியேதான், எப்போதும் உள்ள லௌகிக அலைகளுக்கு நடுவிலேயே இருந்தபடிதான், நீ தெய்வசிந்தனையை எவ்வித மேனும் வரவழைத்துக் கொள்ள வேண்டும். அனுகூலமான வாய்ப்புக்களைத் தேடிக்கொண் டிருப்பது மாயமான் வேட்டைதான்! இன்று இல்லாவிட்டால் என்றுமில்லை என்ற கொள் கையை மேற்கொள்க. உன்னைப் பூரணமாக ஒன்றில் ஈடுபடுத்திக்கொள். பிரதிகூலங்களும் அனுகூலங்களாகிவிடும்.

ராமப்பிரசாத் தமக்குத் தாமே இப்படி உபதேசித்துக் கொள்கிறார்: “அம்பிகையின் கமலபாதங்களில் நீ நிலைக்க வேண்டுமென விரும்பினால் சௌகரியத்தைத் தேடி ஓடாதே. காரியத்தில் நீ ஏன் முட்டாளாக வேண்டும்? உன்னால் முடிந்த அளவும் முயல்வாய் செழுமை யான நல்ல விளைச்சலை அறுவடை செய்வாய்.”

எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டார்! கடமைகளைச் செய்து முடிக்கும் வரையில் விடுதலை இல்லை, பூரண அமைதி இல்லை. நீ எதை ஆற்றாமலே துறந்தாயோ, அது உனக்காகக் காத்துக்கொண்டிருக்கும்—மறுபடி உன்முன்னே வருவதற்குத்தான். அதாவது நீ அதை ஆற்றித் தீரும்படிப் பண்ணுவதற்குத்தான். தாக்கும் பிரச்னைகளை எதிர்த்து நில். ஓடிப்போவதனால் உன்னைக் காப்பாற்றிக்கொண்டுவிட முடியாது.

‘இல்லற வாழ்க்கை பாதகமானதாக இருக்கிறதே, துறவற வாழ்க்கையை மேற் கொண்டால் சாதகமாக இருக்குமே’ என்ற எண்ணம் வியர்த்தமானது. முந்திய கட்டத்தின் கடமைகளை ஆற்றாமல் அடுத்த கட்டத்திற்குப் போக முடியாது. மேலே உள்ள உயர்நிலைகளில் அபிலாஷை வைத்து அதற்காக முயல வேண்டியதுதான். ஆயினும் நிகழ்காலக் கடமைகளிலிருந்து தப்பப் பார்க்காதே. இதை ஒருகாலும் செய்யாதே.

பாலப் பருவத்திலிருந்தே பிரம்மசாரியாக வாழ்பவர்களின் விஷயம் வேறானது. அவர்கள் விசேஷமான நல்ல சம்ஸ்காரங்களுடன் வந்திருப் பதனால் உலகில் வசித்தாலும் அதில் சன்னியாசி களாகவே வாழ்வார்கள். நீ என்னவாக இருக்கிறாயோ அதுவாகத்தான் இருக்கிறாயே யன்றி உயர்நிலைக்கு எழும்பிக் குதிக்க முடியாது. அவ்வப்போது வாய்த்த நிலைமையின் கடமை களை ஒதுக்குவது நல்லதல்ல; அது சாத்தியமும் அல்ல. உன் உலகத்துக் கடமைகளை விடாமல் செய்துவா. ஆயினும் அப்போதும் சதாகாலமும் இறைவனை நினைத்து வருவாயாக. தன் அன்றாட அலுவல்கள் அனைத்தினிடையிலும் காதலனையே நினைத்துக்கொண்டிருக்கிற அபிஸாரிகையின் (ஒழுக்கம் தவறிய பெண்ணின்) உதாரணம் இதைக் குறிப்பாக விளக்குவதாகும்.

இறைவனிடம் இறுக்கமான பக்தி உண்டா வதற்கு ஒருவன் இதயத்தின் அடிவாரத்தி லிருந்து பிரார்த்தனை செய்ய வேண்டும். இதற்கான தகுதியைப் பெறுவதற்குச் சாது சங்கமும், அவ்வப்போது ஏகாந்தவாசமும் அவசியமாகும். உள்ளார்ந்த ஈடுபாடு ஒரு வனுக்கு இருந்துவிட்டால் இறைவனே மார்க் கத்தைத் தயாரித்துக் கொடுப்பான்.

இந்த மனதை அவனுக்கு அர்ப்பித்துவிட வேண்டும். முதலில் வெண்ணெயைக் கடைந்து எடுத்துவிட்டாலே, பிற்பாடு அது ஜலத்தில் உள்ளபோதும் அத்துடன் கலக்காமல் நிற்கும்.

ஒரு சாதுவின் பெருமை அவன் எந்த அளவு சுயசோதனை செய்துகொண்டிருக்கிறான் என் பதைப் பொறுத்ததேயாகும்; அவனுடைய உள்தன்மைகளையும் வெளித்தன்மைகளையும் பற்றி அவனுக்கு எவ்வளவு நுணுக்கமான அறிவு உள்ளது என்பதைப்பொறுத்ததேயாகும்.

சுயசோதனை என்பது மிகவும் கடினமான காரியம். மனதின் தந்திர சேஷ்டைகளைக் கண்டுகொள்வதென்பது மிகவும் சிரமமானது. அப்பா ஆண்டவா! 卐

மதம் இல்லாத விஞ்ஞானம் செவிடு. விஞ்ஞானம் இல்லாத மதம் குருடு.
—ஐன்ஸ்டீன்

பாமதி

நாடோடி

நள்ளிரவு. அந்தச் சிறிய குடிசையில் ஒரு விளக்கெண்ணெய் விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. அந்த விளக்கொளியில் ஒரு முதியவர் ஏதோ சுவடியும் கையுமாகக் காணப்படுகிறார். அந்தச் சுவடியைச் சிறிது நேரம் ஊன்றிப் படிக்கிறார். பிறகு கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்கிறார். பிறகு கண்களைத் திறக்கிறார். சுவடியைக் கீழே வைக்கிறார், பக்கத்தில் நிறையக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் ஓலைகளில் ஒன்றை எடுத்து ஏதோ எழுத ஆரம்பிக்கிறார்.

சுவடியைப் படிப்பதும், கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்வதும், பிறகு ஏட்டில் ஏதோ எழுதுவதுமான வேலை தொடர்ந்து நடந்துகொண்டே செல்கிறது. விளக்கில் உள்ள எண்ணெயும் குறைந்துகொண்டே வருகிறது.

அந்தச் சமயத்தில் ஒரு புதிய பெண்மணி அங்கே தோன்றுகிறாள். அவள் விளக்கில் எண்ணெய் ஊற்றித் திரியைத் தூண்டுகிறாள். அப்பொழுது விளக்கு சட்டென்று அணைகிறது. அது காரணமாக எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்த பண்டித சிரோமணி வாசஸ்பதி மிச்ரரின் வேலை தடைப்படுகிறது.

தவறு நேர்ந்துவிட்டதை உணர்ந்த அந்த அம்மாள், விளக்கை மீண்டும் ஏற்றிவிட்டு அப்பால் செல்ல ஆரம்பிக்கிறாள். உடனே பண்டித சிரோமணி அந்த அம்மாளைத் தடுத்து நிறுத்துகிறார்.

''அம்மா, தாங்கள் யார்?'' என்று கேட்கிறார்.

அந்த அம்மாள் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல், ''தாங்கள் தங்கள் வேலையைத் தொடர்ந்து கவனியுங்கள். விளக்கு அணைந்ததில் தங்கள் வேலை தடைப்பட்டுவிட்டது. தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்'' என்கிறாள்.

ஆனால் பண்டித சிரோமணி அவளை விடுவதாயில்லை. ''தாங்கள் யார் என்று சொன்னால்தான் நான் மேற்கொண்டு எழுதுவேன்'' என்று சொல்லி, எழுதுகோலையும் ஓலைகளையும் கீழே வைத்தார்.

''சுவாமி, நான் உங்கள் மனைவி. தயவுசெய்து என்னை நீங்கள், நீங்கள் என்று கூப்பிட்டு எனக்குப் பாவம் ஏற்படும்படி செய்யாதீர்கள்'' என்றாள்.



''நீ மனைவியா? அப்படியானால் நமக்கு எப்பொழுது திருமணம் ஆயிற்று?''

''ஐம்பது வருடங்களுக்கு முன்னர்!''

''ஐம்பது வருடங்களாக நீ என் மனைவியாக இருந்துமா நான் உன்னைத் தெரிந்துகொள்ளவில்லை!''

''திருமணத்தன்றே தாங்கள் என்னை உங்கள் வலக் கையினால் பிடித்தபோது, இடக் கையில் இந்த ஓலைச்சுவடியை வைத்துக்கொண்டிருந்தீர்கள். இந்த ஐம்பது ஆண்டுகளாக இந்த ஓலைச் சுவடியைப் படிப்பதும், பிறகு படித்ததைப் பற்றிச் சிந்தனை செய்வதும், பிறகு அதை ஓலைகளில் எழுதுவதுமாகத்தான் இருக்கிறீர்கள்.''

''இருந்தாலும் நான் உன் கணவன் என்னும் விஷயத்தை இந்த ஐம்பது வருடங்களாக நீ ஏன் எனக்கு ஞாபகப்படுத்தாமல் இருந்துவிட்டாய்?''

''நான் எப்படி ஞாபகப்படுத்துவது? நீங்களோ உங்கள் வேலையைத் தவிர வேறு எதிலும் சிந்தனை செய்யாமல் இருக்கிறீர்கள்!''

"இருந்தும் ஐம்பது வருடங்களாக நான் உன்னைப் பார்க்கவே இல்லையா? பார்த்தும் இன்று கேட்டது போல, 'நீயார்?' என்று ஏன் முன்னமேயே கேட்கவில்லை?"

"வெறும் கண்களால் மட்டும் பார்த்தால் போதுமா? மனதும் அதில் ஒன்றியிருந்தால், யாரைப் பார்க்கிறோம் என்பது விளங்கும்."

"இந்த ஐம்பது வருடங்களையும் நீ எப்படித் தான் கழித்தாய்?"

"உங்களைக் கவனித்துக்கொள்வது, உங்கள் ஆகாரத்திற்கு ஏற்பாடு செய்வது, உங்கள் ஓலைகளைச் சீர்செய்து பக்கத்தில் வைப்பது, விளக்கு அணையாதபடி பார்த்துக்கொள்வது, இப்படிப் பல வேலைகளைச் செய்துகொண்டிருந்தேன். இன்றுதான் விளக்கு அணைந்து விட்டது. தாங்களும் என்னைக் கவனித்து விட்டீர்கள்."

"ஆமாம், நம் சாப்பாட்டுக்கு வழி?"

"அக்கம்பக்கம் பெண்களுக்கு நான் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன். அவரவர் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து உணவுத் தானியங்கள் கொண்டு வந்து தருவார்கள். அதைக் கொண்டு தங்கள் உணவைத் தயாரிப்பேன்."

"ஐம்பது வருடங்களாகத் தாங்கள் எனக்கு இத்தனை உதவி செய்திருக்கிறீர்கள் என்பதை நான் அறியாமல் இருந்துவிட்டேனே! தயவு செய்து தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். ஆமாம், தங்கள் பெயர் என்ன, அம்மா?"

"பாமதி!"

"தங்கள் கணவனாக இருந்தும் தங்களைப் போஷிக்காமல் விட்டதற்கு என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறிப் பண்டித சிரோமணி தம் மனைவியின் காலில் விழப்போனார்.

அந்த உத்தமி பாமதி அவரைத் தடுத்து நிறுத்தினாள்.

"சுவாமி! தயவுசெய்து என் காலில் விழுந்து எனக்குப் பாவம் சம்பவிக்கச் செய்யாதீர்கள். என்னை மறந்ததனால்தானே பலருக்கு உபயோகப்படும்படியான ஓர் அரிய நூலை தாங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்? அந்த நல்ல காரியத்திற்கு இடைஞ்சல் ஏற்படாமல் என்னால் தங்களுக்குப் பணிவிடை செய்ய முடிந்ததே என்று நான் எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஆகவே முன்னைப் போலத் தாங்கள் என்னை மறந்து உங்கள் வேலையில் ஈடுபடுங்கள்" என்றாள் பாமதி.

பாமதியின் நல்ல குணத்தைக் கண்ட பண்டித சிரோமணி ஆச்சரியப்பட்டார்.

"பாமதி! எத்தனையோ வருட தவப்பயனாக வியாசர் இயற்றிய வேதாந்த தரிசனம் என்னும் நூலுக்கு உரை எழுதத்தான் நான் என் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பித்து விட்டேன். ஆனால் நீ மட்டும் இத்தனை சிரத்தை யுடன் என்னைக் கவனித்திராவிட்டால் இந்த நூல் முற்றுப் பெற்றிராது. ஆகவே இந்த நூலுக்கு, பாமதி என்னும் உன் பெயரைத்தான் வைக்கப்போகிறேன்" என்றார். ஒருமுனைப் பாட்டின் சிகரமான பண்டித சிரோமணி வாசஸ்பதிமிச்ரர் அவர்கள்.

இதுவே வேதாந்த தரிசனத்திற்கு பாமதி என்ற புகழ் வாய்ந்த விளக்கவுரை நமக்குக் கிடைத்த வரலாறாகும்.

தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்தப் பேரவை

தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த பக்தர்களின் இரண்டாவது மாநாடு மே 9, 10 தேதிகளில் கோயம்புத்தூர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் நடைபெற்றது.

அப்போது பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பெயரால் தமிழகத்தில் இயங்கி வரும் எல்லாச் சங்கங்களையும் இணைத்துச் செயற்படுவது என்ற கருத்து எழுந்தது.

அதன் விளைவாக 'தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்தப் பேரவை' என்ற அமைப்புத் துவக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேரவையின் தலைவராக டாக்டர் எஸ். சண்முகம் அவர்களும், செயலாளராகப் பேராசிரியர் ஏ. சுப்பிரமணியம் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பேரவையின் அலுவலகம் 'ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-600 004' என்ற முகவரியில் அமைந்துள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் பெயரால் தமிழ்நாட்டில் இயங்கி வரும் அமைப்புக்கள், ஏனைய விவரங்களுக்கு மேற்கண்டுள்ள முகவரிக்குத் தொடர்புகொள்ளக் கோருகிறோம்.

ஹிந்து மதத்தை ஏராளமான தீய சக்திகள் சூழ்ந்திருக்கும் தற்போதைய நிலையில், சுவாமி விவேகானந்தரின் கோட்பாடுகளுக்கிணங்க இயங்கும் எண்ணற்ற சங்கங்களுக்குப் பெரும் தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

நம்பெருமாள் திருவுருவம்

ந. ரா. முருகவேள்

முன்னுரை

'நாராயணன்' என்னும் நலம்தரும் சொல்லுக்குப் பலபல பொருள்கள் உண்டு. ஆங்காங்கே அவ்வவ்விடத்திற்கு ஏற்ற வகையில் அந்தச் சொல்லுக்குப் பெரியோர் பலவகைப் பொருள் பணிப்பர். "புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயண பதம். அவையாவன—வாத்ஸல்யமும் ஸ்வாமித்வமும் ஸௌசீல்யமும் ஸௌலப்யமும், ஜ்ஞாநமும் சக்தியும் என்பன'' என்று, பிள்ளைலோகாசாரியார் தாம் இயற்றிய 'முமுக்ஷுப்படி' என்னும் நூலில் அருளிச்செய்துள்ளார்.

ஆறு குணங்கள்

1. வாத்ஸல்யம்—பசு தன் கன்றினிடத்திலே கொண்டிருக்கும் பரிவு. தான் ஈன்ற கன்றினுடைய உடம்பின் மீதிருக்கும் அழுக்காகிய வழும்பினையும் விரும்பியுண்ணும்; தன் பாலை உண்ணக் கொடுத்துக் கன்றை வளர்க்கும். கன்றுக்கு ஊறு செய்பவர்களைத் தன் கொம்பாலும் குளம்பாலும் எதிர்த்துத் தன் கன்றுக்கு யாதோர் ஊறும் நேராதபடி பாதுகாக்கும். அது போலவே இறைவனும் அடியவர்களின் குற்றங்களை 'என் அடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்' என்று விரும்பி ஏற்று மகிழ்வான். அவர்களுக்குத் தீங்கு ஏதும் நேராமல் அவர்களைப் பெருங் கருணையுடன் பாதுகாத்து அருள்வான். இறைவனின் இந்த இயல்பே வாத்ஸல்யம் எனப்படும்.

2. ஸ்வாமித்வம்—உடைமையை உடையவனாக இருக்கும் இருப்பு ஸ்வாமித்வம் எனப்படும். சேதனன் ஆகிய உயிர் தன்னைப் புறக்கணித்து விமுகனாக இருப்பினும், அவனைக் கைவிட்டொழிக்க மனம் வாராமல், எப்படியாயினும் ஆட்கொண்டு காத்தருள்வதற்கே விரும்பி, எதிர்சூழல் புக்குத் திரிவதற்கு உரியபடி, உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு முறைமை, ஸ்வாமித்வம் ஆகும்.

3. ஸௌசீல்யம்—தான் உயர்வற உயர்ந்தவனாக இருப்பினும், எவ்வளவு இழிந்தவரோடும் யாதொரு வேறுபாடுமின்றி ஒருங்கே மேல் விழுந்து புரையறக் கலந்து பழகி அருள்புரியும் பண்பு.

4. ஸௌலப்யம் — எத்தனையும் உயர்ந்த இறைவன், எத்தனையும் எளிவந்து, யாவரும் சுலபமாகத் தன்னைப் பற்றிக்கொள்ளும்படி, தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கும் எளிமைத் தன்மை.



5. ஞானம்—உயிர்கள் கீழ்நின்ற நிலையையும், அவற்றை மேல் உய்த்துக் காத்தற்கு உரிய வழிவகைகளையும் அறிந்திருக்கும் தன்மை.

6. சக்தி—அங்ஙனம் தான் அறிந்தபடி சேதனர்களின் குற்றங்களையும் இழிவுகளையும் போக்கி, அவற்றிற்குத் தன்னைக் கொடுத்து நலம் செய்வதற்கு உரிய பேராற்றல்.

'நாராயணன்' என்னும் நலந்தரும் சொல், இந்த ஆறு பெரும் பண்புகளையும் சிறப்பாகக் குறிப்பிட்டு உணர்த்துகிறது என்பர் பெரியோர்.

நம்பெருமாள் திருவுருவம்

சிறந்த இந்த ஆறு தெய்விகப் பண்புகளும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம்பெரு

மாள் திருவுருவ அமைப்பில் தெற்றென விளங்குகின்றன என்று பெரியோர் கூறுவர். பெருமாள் தமது திருக்கைகளிலே முறையே தரித்துக்கொண்டுள்ள திருவாழி திருச்சங்கு என்னும் திவ்ய ஆயுதங்கள், அவர்தம் ஞானம் சக்தி என்னும் பண்புகளை உணர்த்துகின்றன. அடியார்களை நோக்கி 'அஞ்சேல்' என்று அருளிச் செய்யும் நிலையிலுள்ள அபயஹஸ்தம் என்னும் திருக்கை, அவரது வாத்ஸல்யம் என்னும் பண்பைக் குறிக்கும். அவரது திருமுடி, அனைத்திற்கும் அனைவருக்கும் தலைமை நிலையில் விளங்குகிற அவர்தம் ஸ்வாமித்வம் என்னும் குணத்தைப் புலப்படுத்தும். அவர்தம் திருமுகமும் புன்முறுவலும், அவர்தம் ஸௌசீல்யத்தன்மையைச் சுட்டும். ஒளிமிக்க அழகிய தாமரைமலர்ப் பீடத்தில், அவர்தம் திருவடிகளை ஊன்றி நிற்கும் நிலை, அவருடைய எளிமை என்னும் ஸௌலப்யத் தன்மையைச் சாலவும் விளக்கும்.

முடிவுரை

இங்ஙனம் ஞானம் சக்தி வாத்ஸல்யம் ஸ்வாமித்வம் ஸௌசீல்வம் ஸௌலப்யம் என்னும் ஆறு திருக்குணங்களும் ஒருங்கே அழகுற அமைந்து விளங்கும் திருவுருவைக் கொண்டு திகழ்கின்ற திருவரங்கம் நம்பெருமாள் திருவடிகளை நாம் அனைவரும் அன்புடன் வழிபட்டு இன்புற்று வாழ முயல்வோமாக.

<u>ஒரு நீதிக்கதை :</u>

திருக்கச்சிநம்பி

'நாடோடி'

காஞ்சிபுரத்தில், வரதராஜப்பெருமாள் கோவிலில் கைங்கர்யம் செய்துகொண்டிருந்த திருக்கச்சிநம்பி, ராமானுஜரின் ஆசிரியராவார்; ஆளவந்தாரின் சீடருமாவார். ஒரு நாள் இரவு, வரதராஜப்பெருமாள் இவர்முன் தோன்றி, 'அன்பர்களுக்குப் பணி செய்தால்தான் முக்தி கிடைக்கும்' என்று சொல்லிவிட்டார். அதனால், கோவிலில் ஆலவட்டப் பணி செய்துகொண்டிருந்த இவர், அடுத்தநாள் காலையே தம் கோவில் ஆடைகளையெல்லாம் கழற்றி எடுத்து வைத்துக்கொண்டு, ஒரு மாட்டுக்காரனைப் போல உடை உடுத்து, அன்பர்பணி செய்வதற்காகத் திருவரங்கம் சென்றார். அங்கு ஆளவந்தாரின் மற்றொரு சீடரான பெரியநம்பிக்கு வண்டியோட்ட ஆள் தேவை என்று கேள்வியுற்று அவருக்கு வண்டிக்காரனாக அமர்ந்தார்.

திருக்கச்சிநம்பியும் பெரியநம்பியும் ஒரே குருவான ஆளவந்தாரிடம் ஒரு காலத்தில் சீடர்களாக இருந்திருந்தும் பெரியநம்பியால் திருக்கச்சிநம்பியை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. காரணம், பெரியநம்பி திருக்கச்சிநம்பியைவிட வயதில் மூத்தவராதலால், அவருக்குப் பார்வை சற்று மங்கியிருந்தது. மேலும், திருக்கச்சிநம்பியோ மாட்டுக்காரனைப் போலத் தம் வேஷத்தை மாற்றிக்கொண்டிருந்ததோடு தம் நடை உடை பாவனைகளையும் மாற்றிக் கொண்டிருந்தார்.

பெரியநம்பி பல கிராமங்களுக்குச் சென்று பக்திப் பிரசாரம் செய்வார். அப்பொழுது திருக்கச்சிநம்பி வெகு உற்சாகமாக வண்டி ஓட்டிக்கொண்டு போய் அவருடைய பிரசங்கங்களைச் செவி மடுப்பார்.

ஒரு நாள், ஒரு பிரசங்கத்திலிருந்து திரும்பிய பொழுது நல்ல மழை கொட்ட ஆரம்பித்தது. இருட்டு வேறு. வழியெல்லாம் சேறு. மிகவும் கஷ்டப்பட்டுத் திருக்கச்சிநம்பி வண்டியை ஓட்டினார். வழியில் வண்டி சேற்றில் அகப்பட்டுக் கொண்டபோதெல்லாம் கீழே இறங்கி வண்டியைத் தள்ளினார். இதனால் அவர் தொப்பலாக நனைந்தார். ஆனால் பெரியநம்பியை நனையாமல் பார்த்துக்கொண்டோமே என்கிற சந்தோஷம் அவருக்கு இருந்தது.

கடைசியில் வீடு வந்து சேர்ந்ததும், மாடுகளை அவிழ்த்து, ஒரு பக்கம் கட்டிவிட்டு, ஈரத்துணிகளை மாற்றிக் கட்டிக்கொள்ள வேறு காய்ந்த உடைகள் இல்லாததனால், தாம் ஒரு மூலையில் வைத்திருந்த பழைய கோவில் உடைகளையே எடுத்துக் கட்டிக்கொண்டு திண்ணையில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார்.

இதற்குள் உள்ளே சென்ற பெரியநம்பிக்கோ, வண்டிக்காரன் நனைந்துவிட்டானே என்ற கவலை! ஆகவே உலர்ந்த துணிகளை எடுத்துக் கொண்டு, அவர், "வண்டிக்காரா, வண்டிக்காரா!" என்று அழைத்துக்கொண்டே வெளியே வந்தார். இதற்குள் பெரியநம்பியின் பரிசாரகர்களும் விளக்குகளுடன் வெளியே வந்தார்கள்.

கோவில் ஆடையில் இருந்த திருக்கச்சிநம்பியைக் கண்டதும், பெரியநம்பி அவரைக் கட்டித் தழுவிக்கொண்டார். "நீங்களா என் வண்டிக்காரனாக இருந்தீர்கள்! அதைத் தெரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேனே!" என்றார். அத்தனை எளிய வாழ்க்கை வாழ்ந்தவர் திருக்கச்சிநம்பி.

மனுஸ்மிருதியில் சில கருத்துக்கள்

தமிழில் : 'அண்ணா' சுப்ரமண்யம்

நல்ல நடத்தையுள்ளவன் காயத்ரீ ஜபம் மட்டும் செய்பவனாக இருந்தாலும் சிறந்தவன். மூன்று வேதங்களையும் கற்றவனாக இருந்தாலும் நன்னடத்தையில்லாமல் கண்டதைப் புசிப்பவனும் எல்லோருக்கும் விற்பவனும் இருந்தால் இழிந்தவனே.

குரு உபயோகிக்கும் படுக்கையிலும் ஆசனத்திலும் படுக்கவும் உட்காரவும் கூடாது. படுத்திருக்கும்போதும் உட்கார்ந்திருக்கும்போதும் குரு வந்தால் உடனே எழுந்து எதிர்சென்று வணங்கி அபிவாதனம் (இன்ன குலத்தில் பிறந்த இன்னான் என்று அறிமுகம்) செய்ய வேண்டும்.

எப்பொழுதும் பெரியோர்களை வணங்கும் குணம் படைத்தவனுக்கு ஆயுள் வித்தை புகழ் பலம் ஆகிய நான்கும் விருத்தியடைகின்றன.

வண்டியில் செல்பவர்கள், வயது மிக்கவர்கள், நோயாளிகள், பாரம் சுமப்பவர்கள், ஸ்திரீகள், கல்வி பூர்த்தி செய்த பிரம்மசாரி, அரசன், ஆகியோருக்கு வழிவிட வேண்டும்.

எந்தப் பிராம்மணர் உபநயனம் செய்வித்துச் சிஷ்யனுக்கு வேதத்தை அவற்றின் பிரயோகத்துடன் ரகசியமான அர்த்தங்களுடன் ஓதுவிக்கிறாரோ அவரை 'ஆசார்யர்' என்று கூறுகிறார்கள்.

வேதங்களிலும் வேதாங்கங்களிலும் ஒரு பகுதியைத் தொழிலுக்காக எவர் கற்பிக்கிறாரோ அவர் 'உபாத்தியாயர்' எனப்படுகிறார்.

கௌரவத்தில் உபாத்தியாயரைவிட ஆசாரியர் பத்து மடங்கு உயர்ந்தவர்; ஆசாரியரைவிடப் பிதா நூறு மடங்கு உயர்ந்தவர். பிதாவைவிட மாதா ஆயிரம் மடங்கு மேலானவள்.

வேத விற்பன்னரான ஆசாரியர் முறைப்படி ஒருவனுக்கு ஸாவித்ரீ மந்த்ரோபதேசத்தால் எந்தப் பிறப்பை உண்டுபண்ணுகிறாரோ அது உண்மையானது, மூப்பும் மரணமும் அற்றது.

வேதப்பிறவிக்குக் கர்த்தாவும் ஸ்வதர்மத்திற்கு வழி காட்டுபவனுமாகிய பேரறிஞன் (விப்ரன்) பாலனாக இருந்தாலும், தர்மசாஸ்திரப்படி பிதாவைப் போலவே கிழவனுக்கும் மரியாதைக்கு உரியவன் ஆகிறான்.

வயதினாலன்று, நரையினாலன்று, பொருளினாலன்று, உறவினர்களினாலன்று; எவர் அங்கங்களோடு வேதத்தைக் கற்றுணர்ந்தவரோ அவரே நம்முள் பெரியவர் என்று ரிஷிகள் தர்மத்தை ஏற்படுத்தினார்கள்.

எவனுடைய வாக்கும் மனமும் பரிசுத்தமானவையோ, எப்பொழுதும் அடக்கிப் பாதுகாக்கப்பட்டவையோ, அவனே வேதாந்தத்தில் அடங்கிய பயன் அனைத்தையும் பெறுவான்.

தான் துன்பத்தை அடைந்த நிலையிலும் ஒருவன் பிறர் மனதைப் புண்படுத்தும் வார்த்தையைப் பேசுபவனாக இருக்கக்கூடாது. பிறருக்குத் துரோகம் செய்யும் எண்ணமுள்ளவனாக இருக்கக்கூடாது. எந்த வார்த்தையால் இவனைக் கண்டு பிறர் நடுங்குவார்களோ அந்த வார்த்தையைப் பேசக்கூடாது. முடிவில் நல்ல உலகங்களை அடையாமற் செய்யும் வார்த்தைகளையும் பேசக்கூடாது.



விஷத்துக்கு நடுங்குவது போல் பிராம்மணன் எப்பொழுதும் வெகுமானத்தினின்று நடுங்க வேண்டும். அமிருதத்தை விரும்புவது போல் அவமானத்தை எக்காலத்தும் விரும்பி ஏற்க வேண்டும்.

அவமானத்தைப் பொறுத்தவன் சுகமாகத் தூங்குவான்; சுகமாகத் துயிலெழுவான்; உலகில் சுகமாக நடமாடுவான். அவமதித்தவன் அழிந்து போவான்.

சூதாடுதல், வம்பளத்தல், பழி சொல்லுதல், பொய் பேசுதல், ஸ்திரீகளைக் காமத்துடன் பார்த்தல் தொடுதல், பிறருக்குத் தீங்கு செய்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

எங்கும் பிரம்மசாரி தனியாகவே படுக்க வேண்டும். வீரியத்தை ஒருபொழுதும் நழுவவிடக்கூடாது. காமத்தால் வீரியம் நழுவினால் அவன் தன் விரதத்தை அழித்தவனாவான்.

ஹிந்துக்களே! விழித்தெழுங்கள்!

ஹிந்துமதத்திற்கு விரோதமாக எண்ணற்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது.

ஹிந்துக்கள் கருத்து வேற்றுமைகளையெல்லாம் மறந்து, சகோதரர்களாக ஒன்றுபட்டு வாழ வேண்டும். அதற்கு ஆண்டவன் அருள் பாலிப்பாராக.

ஹிந்துக்கள் தங்களைச் சுற்றி ஆபத்து நெருங்குவதைச் சிறிதளவாவது உணர வேண்டும் என்ற எண்ணத்தில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் இங்கே சில தகவல்களை மட்டும் பிரசுரித்துள்ளது.

பாரதத்திலுள்ள கிறிஸ்தவர்கள் ஐரோப்பிய சாம்ராஜ்ய சக்திகளுக்கும், முஸ்லிம்கள் இஸ்லாமிய சாம்ராஜ்ய சக்திகளுக்கும் கையாட்களாகச் செயற்பட்டு வந்துள்ளது ஏதோ கால வரலாற்றிலே நடந்து மறைந்த நிகழ்ச்சிகளல்ல. இன்றும் நாம் கண்கூடாகக் காண்கிற உண்மையாகும்.

பிற மதத்தினர் அச்சுறுத்தல் மூலமும், ஆசை காட்டுவதன் மூலமும், கோடிக்கணக்கான வெளிநாட்டுப் பணங்கள் மூலமும் தமது ஒன்றுபட்ட சக்தியின் துணைகொண்டு ஹிந்துக்களை—குறிப்பாக ஹரிஜனங்களை—மதம் மாற்றி வருவதை நாடே அறியும். கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் தம்மிடமுள்ள கட்டுக்கோப்பான இயக்க பலத்தைக் கொண்டு மக்களுக்கு அரசு வழங்கிவரும் சலுகைகள் பலவற்றை ஏற்கனவே தட்டிக்கொண்டு போவதை அனைவரும் அறிவர். இந்த நாட்டின் வரிப்பணம் 85% ஹிந்துக்கள் அள்ளித் தருவது. இதனைப் பிற மதத்தவரின் ஹிந்து விரோத நடவடிக்கைகளை ஊக்குவிக்கச் செலவிடுவதை ஹிந்து சமுதாயம் ஒருநாளும் மறக்காது, மன்னிக்காது, சகிக்காது.

தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் வியாபாரங்களும் நிலங்களும் வீடுகளும், வெளிநாடுகளிடம் அனுதாபமும் விசுவாசமும் கொண்ட பிறமதச் சக்திகளிடம் போய்விடுவது அபாயத்துக்கு அறிகுறி என்று ஹிந்து முன்னணி எச்சரிக்கிறது. ஹிந்துக்கள் விழிப்புடன் இருந்து செயற்படாவிட்டால் வருங்காலம் கவலைக்கிடமாகிவிடும். ஆகவே ஹிந்துக்கள் ஆசைகளுக்கும் கவர்ச்சிகளுக்கும் பலியாகாமல், தமது நிலங்களையும் வீடுகளையும் வியாபாரங்களையும் ஹிந்துக்களுக்கே விற்கக் கோருகிறது. அது போலவே ஹிந்துக் கடைகளிலேயே பொருள்களை வாங்க வேண்டும் என்றும், ஹிந்து வழக்கறிஞர்கள், டாக்டர்கள் முதலியவர்களையே ஆதரிக்க வேண்டும் என்றும் கோருகிறது.



இந்த மதமாற்றங்களை எந்த விலை கொடுத்தும் தடுக்க வேண்டியது தன்மானமுள்ள ஹிந்துக்கள் தாய்த் திருநாட்டிற்கு ஆற்ற வேண்டிய பெரும் கடமையாகும். மதமாற்றத்தால் நமது நாட்டில் பாகிஸ்தானங்களும், இன்று வடகிழக்கு மாநிலங்களில் கோரப்பட்டு வருவது போன்ற கிறிஸ்தவ ஸ்தானங்களும் ஏற்படுவது மட்டுமல்லாமல், ஹிந்து ஹிந்துவாக ஹிந்துவினுடைய தேசத்திலேயே வாழ முடியாத நிலையை ஏற்படுத்தி வருகிறது.

துரதிருஷ்டவசமாக, சிறுபான்மை வகுப்பினரின் ஒட்டுமொத்தமான வாக்குகளில் மோகம் கொண்டுள்ள அரசியல்வாதிகளுக்கு இந்தப் பயங்கரமான நிலை தெரியவில்லை, புரியவில்லை, அப்படிப் புரிந்தாலும் தங்களுடைய சுயநலன் கருதிக் கண்பொத்தி இருக்கின்றனர். ஆகையினால், ஹிந்து மக்கள்தாம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். தன்மானமுள்ள ஹிந்துவே, எழுந்திரு! எந்த விலை கொடுத்தும் மதமாற்றத்தைத் தடுத்திடு!

பாரதத்திலிருக்கும் முஸ்லிம்களுக்குத் தனி நாடு வேண்டும் என்று கோரிக்கை எழுப்பும் சுவரொட்டிகள் ஹைதராபாத் நகரில் தோன்றியுள்ளன என்று யூ. என். ஐ. செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது. முஸ்லிம்கள் காலிஃப் என்று தம்மைத் தாமே கூறிக் கொள்ளும் கிஸ்ரி ஷாஹஹாஷமியின் பெயரில் இந்தச் சுவரொட்டிகள் வெளிவந்துள்ளன. கடந்த மாதம் ஹைதராபாத்தில் நடைபெற்ற ஜாம அத்தே இஸ்லாமி மகாநாட்டில் எழுப்பப் பட்ட கோரிக்கைகள்தாம் இந்தச் சுவரொட்டிகளில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தச் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் 34 முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

புராண இதிகாச இலக்கியச் சொற்பொழிவாளர்கள் தங்களுடைய சொற்பொழிவுகளில் தவறாமல் ஹிந்து மதப் பெருமைகளையும், ஹிந்து ஒற்றுமையின் அவசியத்தையும், மற்ற மதத்தினால் நம் மதத்திற்கும் மதச் சின்னங்களுக்கும் ஏற்படும் இன்னல்களையும் எடுத்துக் கூறக் கேட்டுக்கொள்கிறோம்.

செங்கம் நகரில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் முஸ்லிம்களால் மூடப்பட்ட பொதுக்கிணறு, ஹிந்து முன்னணி சார்பாக மீண்டும் தோண்டப் பட்டது. கிணறு மசூதிக்கு அருகில் இருப்பதனால் முஸ்லிம்கள் விழா நடத்த நிரந்தர மேடை அமைக்கத் திட்டம் போட்டு, இரவோடு இரவாக ஒருவருக்கும் தெரியாமல் பொதுக் கிணற்றை மூடிவிட்டார்கள். இந்தக் கிணற்றை மூட உடந்தையாக இருந்தவர் பஞ்சாயத்து யூனியன் உதவிப் பிரஸிடெண்டாக இருந்த ஒரு முஸ்லிம் ஆவார். கிணறு மீண்டும் தோண்டப்பட்டதோடல்லாமல், அதனைப் புதுப்பித்துக் கட்டிவிட்டனர் ஹிந்து முன்னணியினர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில், வெட்டு வென்னி என்னும் பகுதியில் புகழ்பெற்ற சாஸ்தா கோவில் அமைந்துள்ளது. அனைத்து ஹிந்து மக்களாலும் அந்த இடம் மேன்மேலும் பெருமை பெற்று விளங்குகிறது. இதைப் பொறுக்க மாட்டாத கதோலிக்கக் கிறிஸ்தவர்கள் அந்தக் கோவிலுக்கு அருகில் குரிசு ஒன்றை அமைத்து, சுமாராக 25க்கு மேற்பட்ட சர்ச்சுகளிலிருந்து செவ்வாய்க்கிழமைகளில் அங்கே சென்று, சாயங்காலவேளையில் கோவிலில் சிறப்புப் பூஜைகள் செய்ய முடியாதபடி பெருங்கூட்டமாக நின்று ஏதோ ஓலமிடுகிறார்கள். அந்த நேரத்தில் நம் கோவிலில் சிறப்புப் பூஜை செய்யக்கூடாது என்றும், நாம் அவ்வாறு செய்வது அவர்கள் ஓலமிடுவதற்கு இடையூறாக உள்ளது என்றும், ஆகவே நாம் அந்த நேரத்தில் பூஜை செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் கட்டாயப்படுத்துகிறார்கள்.

26-3-81 அன்று இரவு மணக்கரையிலிருந்து மூன்று ஹிந்து மாணவர்கள் குமார கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, சுமார் பதினைந்து கிறிஸ்தவர்கள் அந்த மாணவர்களை வழிமறித்து அவர்களில் ஒருவனைப் பிடித்துச் சர்ச்சுக்குக் கொண்டு சென்று, பாதிரியாரின் முன்னிலையில் மிரட்டி மதமாற்றம் செய்ய முயன்றனர். இதனால் ஆத்திரமடைந்த ஹிந்துக்கள் மாடத் தட்டுவிளை ஊர்க்காவல் துறையினரின் உதவியுடன் பாதிரியாரிடம் சென்று, அந்த மாணவனை விடும்படியும் மன்னிப்புக் கேட்கும் படியும் கேட்டுக்கொண்டார்கள். பாதிரியார் நடந்த சம்பவத்திற்காக மன்னிப்புக் கேட்டு, மாணவனை விட்டுவிட்டார். மாணவனைப் பாதிரியாரின் தலைமையில் ஒரு கும்பல் மதமாற்றம் செய்ய முயன்றும், அந்த மாணவன் வீரத்துடன் மறுத்துவிட்ட வீரத்தை ஹிந்து சமுதாயம் வெகுவாகப் பாராட்டியது. அதே சமயத்தில் மேற்படி பாதிரியாரின் அட்டூழியம் மேலும் தொடருமானால் பெரும் நடவடிக்கை எடுக்கக் குமரி மாவட்ட ஹிந்துக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

நன்றி : விஜயபாரதம்

அச்சமற்ற ஹிந்துவே! அணி திரண்டு வந்திடு!

இராம. கோபாலன்
மாநில அமைப்பாளர் : 'ஹிந்து முன்னணி'
73, சரவணப் பெருமாள் தெரு,
புரசைவாக்கம், சென்னை-600 007

ஹிந்துக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவது, கிறிஸ்தவ இஸ்லாமிய மதத்தினர் ஹிந்துக்களுக்கு இழைக்கும் அநீதிகளைத் தட்டிக் கேட்பது, ஹிந்து சக்தியை ஒன்றுதிரட்டுவது ஆகிய இலட்சியங்களின் அடிப்படையில் ஹிந்து முன்னணி என்ற அமைப்பு, கடந்த சில மாதங் களுக்கு முன்பு தமிழகத்தில் துவக்கப்பட்டது.

கட்சிச் சார்பற்ற ஹிந்து முன்னணி அமைப்பிற்குத் தற்சமயம் சுமார் இருநூறு ஊர்களில் கிளைகள் உள்ளன. இதன் உறுப்பினர்கள் ஹிந்து மதத்தையும் உன்னத ஹிந்து பாரம்பரியங் களையும் பாதுகாப்பதற்குத் துணிவுடன் உண்மையாகவே உழைக்கிறார்கள்.

ஹிந்து மதத்திற்கு நேர்ந்து வரும் அபாயங்களை உணர்த்தி, ஹிந்துக்களிடையே விழிப் புணர்ச்சி ஏற்படுத்தி வரும் ஹிந்து முன்னணியின் மாநில அமைப்பாளர் கோபால்ஜி அவர்கள் சிந்திப்பதற்கு உரிய சில கருத்துக்களை இங்கே கூறுகிறார்.

மத மாற்றங்கள்

மத மாற்றங்கள் தேச விரோத மனப்போக்குகளை வளர்க்கின்றன என்பது நமது கசப்பான அனுபவம். மேகாலயம், மிசோராம், நாகாலாந்து முதலிய பாரத வடகிழக்குப் பகுதி ராஜ்யங்களில் இன்று நடந்து வருகிற கலவரங்களுக்கும் பிரிவினை முயற்சிகளுக்கும் ஆயுதப் புரட்சிகளுக்கும் இந்த மத மாற்றமும் அதன் பின்னால் ஒளிந்து வேலை செய்கிற அந்நியப் பாதிரிகளின் விஷக் கரங்களுமே காரணம் என்பது உலகறிந்த உண்மை.

ஒரு பகுதியில் வசிப்பவர்கள் முஸ்லிம்களாக மதம் மாறி, அது முஸ்லிம் பெரும் பான்மைப் பகுதியாகிவிட்டால் பாரதத்திலிருந்து வெட்டிப் பிரிந்து பாகிஸ்தானுடன் சேர்ந்துவிடும் என்பது நாம் அண்மையில் பெற்ற அனுபவம்.

ஹிந்து தர்மத்தில் இருப்பது போன்ற உயர்ந்த ஆன்மஞானமோ தத்துவஞானமோ பிற மதங்களில் இல்லை. இந்த நிலையில், மத மாற்றம் என்பது ஒரு பெரும் மோசடியே. அந்நிய வல்லரசுகளுக்கு ஐந்தாம் படையைத் தயாரிக்கும் திட்டம்தான் இது.

இந்த உண்மையை ஏராளமான ஆதாரங்களுடன் அண்மையில் டில்லியிலிருந்து வெளியாகியுள்ள புத்தகம் [What Ails India's North East?-By B. P. Shukla] நாற்பத்திரண்டு நூல்களையும் தஸ்தாவேஜுகளையும் ஆதாரம் காட்டி விளக்கியுள்ளது.

1957-ஆம் ஆண்டு கிறிஸ்தவர்கள் வெளியிட்டுள்ள ஒரு படத்தில் [Souvenir of the National Eucharistic Congress, Madras 1937] பாரதத்தின் வரைபடம் போட்டு அது முழுவதிலும் இயேசு கிறிஸ்து வியாபித்திருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் கன்னிமேரி மாவட்டமாக ஆக்கப்பட அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த கிறிஸ்தவர்கள் முயன்று வருகிறார்கள். வோட்டுக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கும் அரசியல்வாதிகள் இதற்கும் ஆதரவு தெரிவித்து ஒத்துழைத்து வருவதில் வியப்பில்லை. இந்தச் சதித்திட்டங்களை ஹிந்து ஒற்றுமையின் மூலமாகத்தான் முறியடிக்க முடியும்.

மதச்சார்பற்ற அரசு

தன்னை மதச்சார்பற்ற அரசு என்று சொல்லிக்கொள்ளும் இந்த அரசு, மசூதிகள் சர்ச்சு ஆகியவற்றின் நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. அவற்றின் சொத்துக்களை நிர்வகிப்பதில் தலையிடுவதில்லை. ஆனால் ஹிந்துக் கோவில்கள் மற்றும் தர்மஸ்தாபனங்களின் சொத்துக்களை நிர்வகிக்கிற சாக்கில் பாழடித்து வருகிறது.

தமிழ்நாட்டில் கோவில்களுக்குச் சொந்தமான நிலங்களில் கோடிக்கணக்கில் குத்தகை பாக்கி நிற்கிறது. ஆயிரக்கணக்கான கோவில்களில் அன்றாடப் பூஜைக்கே வழி இல்லை; எண்ணற்ற கோவில்களில் விளக்கேற்ற வழி இல்லை.

கோவில் நிலங்களை உழுபவர்களுக்கே விட்டுவிட்டு அந்த நிலங்களுக்கு உரிய தொகையைக் கோவில்களின் பெயரில் அரசுக் கடன் பத்திரங்களாக வழங்கிவிடலாம் என்றும் யோசனை கூறப்படுகிறது. நாத்திகர்களும் கம்யூனிஸ்ட்டுகளும் இதற்காகத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ரூபாயின் மதிப்பு வெகு வேகமாகச் சரிந்து வரும் இந்தக் காலத்தில், அதன் 'வாங்கும் சக்தி' நலிந்து வரும் இந்த வேளையில், இந்தத் திட்டங்கள் கோவில்களை அடியோடு அழிப்பதற்காகத்தான் தீட்டப்படுகின்றன என்று தோன்றுகிறது. கோவில்களில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படுவோரில் பெரும்பான்மையானவர்களுக்குச் சமய நம்பிக்கை இல்லை. உண்டியல் எண்ணுவதில் மோசடி நடக்கிறது. தரிசனத்துக்காகக் கட்டணம் வசூலிக்கிற காட்டுமிராண்டித் தனம் தங்குதடையின்றி நடக்கிறது. கோவில்களில் ஆகமவிதிப்படி நடக்க வேண்டிய முறைகளை மாற்றுவதற்கும், ஆளும் கட்சியினரின் சீர்திருத்தக் கருத்துக்களுக்குச் சோதனைக் களங்களாக ஆலயங்களைப் பயன்படுத்தவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. தெய்வச் சிலைகள் திருட்டுப் போகின்றன.

இதற்கெல்லாம் காரணம் என்ன? பிற மதத்தினர் தமது மத விஷயங்களில் அரசின் குறுக்கீட்டைச் சகித்துக்கொள்ள மாட்டார்கள். ஹிந்துக் கோவில்களின் இழிநிலைகளைப்பற்றிக் கவலைப்பட, அதற்காக வாதாட, போராட எவரும் இல்லை. கோவில்கள் அழிந்தால் ஹிந்து சமுதாயம் அழியும். ஹிந்து ஒற்றுமைதான் அரசாங்கத்தின் ஹிந்து விரோதப் போக்குகளை முறியடிக்கும்.

ஹிந்து அல்லாதாரின் ஸ்தாபனங்கள்

ஹிந்து அல்லாதார் தமது பள்ளிகளை எப்படி வேண்டுமானாலும் நடத்தி வரலாம் யாரை வேண்டுமானாலும் வேலைக்கு வைத்துக் கொள்ளலாம்; எவரை வேண்டுமானாலும் எப்போது நினைத்தாலும் வேலையிலிருந்து நீக்கலாம். அவர்கள் நடத்துகிற பள்ளிகளுக்கு முன்பணம் கட்டுகிற விஷயத்திலும் சலுகைகள் உண்டு. சுருங்கக் கூறின், முஸ்லிம் கிறிஸ்தவப் பள்ளிகள் தம் இஷ்டப்படிச் செயற்பட உரிமை உண்டு சிறுபான்மையினர் ஸ்தாபனம் என்ற பெயரில் அவர்கள் மாணவர்களிடமிருந்து எவ்வளவு பணம் வசூலித்தாலும் கேள்வி முறையே இல்லை.

பிற மதத்தினர் நடத்தும் பள்ளிக்கூடங்களில் அவர்கள் தாராளமாக மதப் பிரசாரம் செய்யலாம். அவர்களுக்கு எவ்விதத் தடங்கலும் கிடையாது. ஆனால் ஹிந்துப் பள்ளிகள் மதபோதனை நடத்த முடியாது. வகுப்பறைகளில் நாத்திகப் பிரசாரம் செய்கிற ஆசிரியரையும் ஒழுங்கீனத்தைத் தூண்டிவிடுகிற ஆசிரியரையும்கூட வெளியே அனுப்ப முடியாது. ஹிந்துக்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்த நூறாயிரம் முட்டுக்கட்டைகள். இவ்வளவும் பெரும்பான்மை ஹிந்துக்களின் வோட்டுகளைப் பெற்று ஆட்சி நடத்துகிற அரசின் பாரபட்சப் போக்கினால்தான்.

குறிப்பாகத் தமிழ்நாட்டில் மாநில அரசின் கல்வித் துறையும் சமூகநலத் துறையும் கிறிஸ்தவர்களின் பிடியில் இருந்து வருகின்றன. கிறிஸ்தவர்களிடம் கல்வித்துறை இருப்பதில் நமக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் அதைக் கிறிஸ்தவப் பிரசாரங்களுக்கு அவர்கள் பயன்படுத்து வதையே நாம் கண்டிக்க வேண்டியுள்ளது. கல்வித் துறையிலுள்ள கிறிஸ்தவ அதிகாரிகள் தமது மதத்தினர் நடத்தும் நிறுவனங்களுக்குச் சலுகையும் ஹிந்துக்களின் இயக்கங்களுக்குத் தொல்லையும் கொடுத்து வருகிறார்கள். முஸ்லிம் கிறிஸ்தவப் பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரம் மிகவும் எளிதில் கிடைத்துவிடுகிறது. கல்விக்காகவும் சமுதாய நலனுக்காகவும் அரசு ஒதுக்குகிற நிதியின் கணிசமான பகுதி பலவேறு தந்திரங்களாலும் குறுக்கு வழிகளாலும் ஹிந்து அல்லாதவர் களுக்குப் போய்ச் சேருகிறது. ஹிந்துக்களுக்குள் ஒற்றுமையோ கட்டுப்பாடோ இல்லாத தனால்தான் இந்தக் கொடுமை நீடித்து வருகிறது.

பரந்த மனப்பான்மை

ஹிந்துக்கள் பரந்த மனப்பான்மை கொண்டவர்கள் என்பது உலகறிந்த உண்மை.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பவர்கள் நாம்.

'எம்மதமும் சம்மதம்' என்று கருதுபவர்கள்.

எல்லா மதங்களும் வாழ உதவியவர்கள்.

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னால் கேரளத்திற்குள் முஸ்லிம்கள் வந்து வியாபாரத் திற்காக அடியெடுத்து வைத்தனர். சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவர்களும் அங்கு வந்தனர். கேரளத்தை ஆண்ட ஹிந்து மன்னர்கள், முஸ்லிம்களுக்கு வியாபாரம் செய்ய வசதி அளித்ததுடன் மசூதி கட்டிக்கொள்ள நிலமும் வழங்கினர். தமது மதத்தைப் பின்பற்ற மட்டுமல்லாமல் பிரசாரம் செய்யவும் வசதி அளித்தனர். அது போலவே கிறிஸ்தவர்களுக்கும் சர்ச் கட்டிக்கொள்ள நிலமும், மதப் பிரசார உரிமையும் வழங்கினர். இவற்றை முழுமையாகப் பயன்படுத்தி, இந்த இரு மதத்தவர்களும் வெகுவாக வளர்ந்துவிட்டார்கள். இன்று அங்குள்ள மொத்த ஜனத்தொகையில் 20 சதவீதம் முஸ்லிம்களும் 20 சதவீதம் கிறிஸ்தவர்களும் ஆகிவிட்டார்கள். அதனால் இன்று அங்கே எத்தனையோ சிக்கல்களும் பிரச்னைகளும் உருவாகி யுள்ளன. ஹிந்து தனது பரந்த மனப்பான்மை காரணமாக, இன்று தத்தளிக்கிறான்.

கிறிஸ்தவர்கள் நாள்தோறும் தெருத்தெருவாக வந்து, ஹிந்து சமயத்தையும் தெய்வங்களை யும் நம்பிக்கைகளையும் நாக்கில் நரம்பின்றித் தூஷிக்கிறார்கள். ஹிந்துக்கள் கூட்டமாகக் கூடி வேடிக்கை பார்க்கிறார்கள்.

ஹிந்துக்களாகிய நாம் அபாயகரமான இந்தச் சகிப்புத்தன்மைகளை எல்லாம் இனி மேலாவது தூர ஒதுக்கித் தள்ளிவிட்டு, நம்மைத் தற்காத்துக்கொள்ளுவதிலும், வஞ்சனை மூலமும் வலுக்கட்டாயமாகவும் மதம் மாற்றப்பட்டவர்களைத் தாய் மதம் திரும்ப வைக்கவும், இங்கேயே அவர்கள் நீடித்து இருக்கவும் அவசரமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

ஒரே வழி

தீண்டாமை என்பது உண்மையில் அவ்வளவாகச் சமுதாயத்தில் இல்லை. ஆனால் சிறிதளவு இருக்கும் தீண்டாமையைப் பெரிதுபடுத்திப் பிற மதத்தவர்கள் வளர விரும்புகிறார்கள்.

நமது தேசியத் தலைவர்களும் சமூகச் சீர்திருத்தவாதிகளும் அண்மையில் நமது மடாதிபதி களும் தீண்டாமையை 'மாபாவம்' என அறிவித்துள்ளார்கள். அதனை வேரும் வேரடி மண்ணுமின்றி அழித்து, ஹிந்து சமுதாயத்திலுள்ள அனைத்து ஜாதிப் பிரிவுகளுக்கிடையே சமத்துவத்தையும் இணக்கத்தையும் உருவாக்கக் கிணறுகள் குளங்கள் கோவில்கள் மயானங்கள்

ஆகியவற்றை அனைத்து ஹிந்துக்களும் பொதுவாகப் பயன்படுத்தி வைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஹிந்து எழுச்சி மாநாடுகள், ஊர்வலங்கள், ஆலயத் திருவிழாக்களில் தொடர் சொற்பொழிவுகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து ஹிந்து சமய சமூக ஞானத்தையும் ஒற்றுமையையும் வளர்க்க வேண்டும்.

எந்த மூலைமுடுக்கிலாவது ஹிந்துக்களுக்குப் பிரச்னை ஏற்பட்டால் உடனே ஓடிச் சென்று உதவக்கூடிய குழுக்களைப் பட்டிதொட்டிதோறும் உருவாக்க வேண்டும்.

வாரந்தோறும் பிரசாரக் குழுக்கள் தெருத்தெருவாகச் சென்று நமது அருமை பெருமைகளையும் நம்மைச் சூழ்ந்துள்ள அபாயங்களையும் நமது கடமைகளையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

ஹிந்துக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை அரசுக்கு உணர்த்த ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், மனு கொடுத்தல் முதலிய நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவை மூலம் ஹிந்துக்களிடையே எழுச்சியூட்ட வேண்டும்.

ஹிந்துக் கடைகளிலேயே நமக்கு வேண்டிய பொருள்களை வாங்க வேண்டும். வாய்மொழியாக நமக்குத் தெரிந்த அனைவரிடமும் இதுபற்றிப் பேச வேண்டும். ஹிந்து டாக்டர்கள், வக்கீல்கள் முதலியவர்களையே ஆதரிக்க வேண்டும்.

தேர்தல்கள் வரும்போது ஹிந்துக்களுக்காகப் பரிந்து பேசிய, வாதாடிய, போராடிய வேட்பாளர்களையே ஆதரிக்க வேண்டும். அல்லது ஹிந்துக்களுக்காகப் போராட வாக்குறுதியளிக்கும் வேட்பாளர்களுக்கே வாக்களிக்கவும் அவர்கள் வெல்ல வேலை செய்யவும் வேண்டும்.

ஹிந்து முன்னணிக் கிளைகளைச் சிற்றூர் பேரூர்கள் அனைத்திலும் துவங்க வேண்டும். அரசியல், வழிபாடு, ஜாதி முதலிய அனைத்து வேறுபாடுகளையும் அகற்றி, அனைவரையும் தொண்டர்களாக்க வேண்டும். பிளத்தற்கரிய ஹிந்து சக்தியை உருவாக்க வேண்டும்.

கார்மேகங்கள் சூழ்கின்றன. அழிவுச் சக்திகள் நெருக்குகின்றன. ஒன்றுபட்டு நிற்போம். 'ஹிந்துக்கள் அனைவரும் நமது சகோதரர்கள்' என்று ஒரே குரலில் முழங்குவோம்.

செய்திகள்

※ திருவண்ணாமலை, ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த மன்றம் 5—6—81-ஆம் நாள் நர்சரிப் பள்ளியைத் துவக்கியது. பள்ளியின் துவக்க விழாவிற்கு சுவாமி சர்வக்ஞானந்தர் தலைமை வகித்துப் பேசினார். சுவாமி ஏகாத்மானந்தர் பள்ளியைத் துவக்கி வைத்து ஆசியுரை வழங்கினார்.

※ ஆவடியிலுள்ள 'டொனெகேலா' என்ற இடத்தில் 24—5—81-ஆம் நாள் விச்வஹிந்து பரிஷத் ஒரு நாள் முகாம் நடத்தியது. இதில் சுவாமி கமலாத்மானந்தர் கலந்துகொண்டு 'இந்துமதமும் விவேகானந்தரும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

※ பெரம்பூர், ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கம் 14—6—81-ஆம் நாள் காலை 9 மணிக்கு விவேகானந்த ஹாலில் வார வழிபாடு நடத்தியது. சுவாமி கமலாத்மானந்தர் 'ஆன்மிக வாழ்க்கை' என்பதுபற்றி உரை நிகழ்த்தினார்.

※ சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் 15—6—81 இரவு 7 மணிக்கு, 'தற்கால மக்களும் மதமும்' என்னும் தலைப்பில் சுவாமி ரங்கநாதானந்தரின் சொற்பொழிவு நடைபெற்றது.

※ சத்ரபதி சிவாஜி முடிசூட்டிக்கொண்ட திருநாளே ஹிந்து சாம்ராஜ்ய தினமாகும். மயிலாப்பூர், டீச்சர்ஸ் காலனியில் 15—6—81 இரவு 7 மணிக்கு 'ஹிந்து சாம்ராஜ்ய தினம்' பெருவிழாவாகக் கொண்டாடப் பெற்றது. சுவாமி கமலாத்மானந்தர் 'சத்ரபதி சிவாஜியும் ஹிந்துமதமும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

※ மதுரை, காந்திநகரிலுள்ள வைகை வடகரையில் ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் அமைந்திருக்கிறது. 1934-ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

17—6—81-ஆம் நாள் காலை 9 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் புதிய கட்டிடத்தை சுவாமி சர்வக்ஞானந்தர் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து அனுக்ஞை, ஸ்ரீவிஷ்வக்ஸேன பூஜை, ம்ருத் ஸங்க்ரஹணம், அங்குரார்ப்பணம், வாஸ்து சாந்தி, கும்பஸ்தாபனம், அக்கினிப் பிரதிஷ்டை, யாக ஆரம்பம் ஆகியவை நடந்தேறின.

18—6—81 காலை 9-30 மணிக்குப் பூர்ணாஹுதியுடன் வைபவம் துவங்கிற்று. அதைத் தொடர்ந்து ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்திற்கும் ஸ்ரீபரமஹம்ஸ விமானத்திற்கும் ஸம்ப்ரோக்ஷண கும்பாபிஷேகம் நடந்தேறியது.

மகா கும்பாபிஷேகத்தின் இரண்டு நாள் வைபவங்களிலும் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களைச் சேர்ந்த சுவாமி ஏகாத்மானந்தர், சுவாமி அவ்யயானந்தர், சுவாமி சம்பிரக்ஞானந்தர், சுவாமி ராகவேசானந்தர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கடவுளோடு வாழ்ந்தவர் — கோபாலேர் மா

ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யைகளாக விளங்கியவர் பலர். அவர்களுள் முதன்மையானவர் அகோரமணிதேவியே ஆவார்.

'இந்தக் கலியுகத்திலும் இப்படி ஒரு பக்திமதி வாழ்ந்தாரா!' என்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தக்கூடிய வகையில் அகோரமணியின் உன்னத வாழ்க்கை அமைந்திருக்கிறது. அவரை 'கோபாலேர் மா — கோபாலின் அன்னை' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் அழைப்பது வழக்கம்.

கோபாலேர் மாவின் வாழ்க்கை வரலாறு விஜயத்தின் இந்த இதழிலிருந்து துவங்குகிறது.

கல்கத்தாவிலிருந்து வடக்கே சுமார் ஏழு மைல் தூரத்தில் கங்கைநதிக்கரையில் இருக்கும் 'காமார்ஹாடி' என்னும் கிராமத்தில் 1822-ஆம் ஆண்டு, ஸ்ரீ காசிநாத் பட்டாசாரியரின் (கோஷால்) வறுமையான இல்லத்தில் அகோரமணிதேவி பிறந்தார்.

ஒன்பதாவது வயதில் பர்கண மாவட்டத்திலுள்ள பாயிக்ஹாடி கிராமத்தில் இவருக்குத் திருமணம் ஆயிற்று. திருமணத்தன்று மட்டுமே கணவரைச் சந்தித்த அகோரமணி, தமது பதின்மூன்றாவது வயதிலேயே, தந்தையின் வீட்டில் வசித்து வந்த காலத்திலேயே விதவையானார்.

இளம் விதவையான அகோரமணி தம் பெற்றோர் உயிருடன் இருந்தவரை விதவைக் கோலம் பூணவில்லை. ஆனால் அதன்பின் முழுமையாக ஓர் ஹிந்து விதவைப் பெண்ணின் ஆடைகளையே மேற்கொண்டார்.

இவரது உடல் சற்றுக் குள்ளம். ஆனால் நல்ல திடமான அமைப்புடன் விளங்கியது. நிறமோ நல்ல கறுப்பு. உடல் முழுவதும் ஒருவகைத் தூய்மைப் பிரகாசத்தோடு விளங்கியது. ஸ்ரீராமகிருஷ்ணரைவிடச் சுமார் பதினொன்கு வயது மூத்தவராக இருப்பார். ஸ்ரீராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் சுமார் இருபது ஆண்டுக்காலம் உயிருடன் இருந்தார்.

காமார்ஹாடியில் அகோரமணியின் பிறந்த வீட்டின் அருகிலேயே, கல்கத்தா படல்டங்காவில் வாழ்ந்து வந்த கோவிந்தசந்திர தத்தரின் பூர்விக வீடு இருந்தது.



தத்தர் காமார்ஹாடியில் கங்கைநதிக்கரையில் ஸ்ரீராதாகிருஷ்ண விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து அதற்குப் பூஜை நிவேதனம் ஆராதனை செய்ய ஏற்பாடு செய்திருந்தார். அவரது மறைவுக்குப் பின் பொருள்நஷ்டம் அதிகமானதனால் பூஜைகள் சரிவர நடத்த இயலாமற் போகுமோ என்ற அச்சத்தினால் தத்தரின் மனைவி அங்கேயே தங்கிப் பூஜைகள் சரிவர நடத்தத் தொடங்கினார்.

தார்மிக வழியைப் பின்பற்றிய தத்தரின் மனைவி மிகவும் கடினமான பிரம்மசரிய வாழ்க்கையை மேற்கொண்டு, தரையிலேயே படுப்பது, தினம் மூன்றுவேளை நீராடுவது, ஒரு வேளை மட்டுமே உணவு உண்பது, உபவாசம் இருப்பது, விக்கிரக ஆராதனை செய்வது முதலிய பழக்கங்களை மேற்கொண்டு வந்தார்.

இந்தச் சமயத்தில் தத்தர் குலத்தின் புரோகிதக் குடும்பத்தில் ஒருவரான நீலமாதவ

பட்டாசாரியர் இந்தக் கோவிலின் அர்ச்சகராக இருந்தார். இவர் அகோரமணியின் சகோதரர் ஆவார். இது காரணமாகவும், ஒரே மன இயல்பை உடையவர்களாகவும் இருந்த அகோர மணிக்கும் தத்தரின் மனைவிக்குமிடையில் நட்பு ஏற்படலாயிற்று.

அகோரமணி தமது கணவர் வீட்டுக் குருவினிடம் கோபால மந்திரதீட்சை பெற்றிருந்தார். சுமார் முப்பது வயது இருந்தபோது அவர் தத்தரின் வீட்டிற்கு வந்து அவ்வீட்டுப் பெண்மணிகளுடன் சேர்ந்து வசிக்கத் தொடங்கினார். தினம் இரண்டொரு முறை பிறந்த வீட்டிற்குச் சென்று வருவார்.

தத்தரது வீட்டின் தெற்குப் பகுதியில் பால தபஸ்வினியான அகோரமணி தங்கியிருந்தார். இவர் தங்கியிருந்த அறையிலுள்ள ஜன்னல்கள் வழியாக மிகவும் ரம்யமாக, கங்கைநதி காட்சியளித்தது. இந்த அறையிலேயே அகோரமணி பகல் இரவு என்று இல்லாமல் எப்போதும் ஜபத்தில் மூழ்கியிருப்பார்.

ஜபம் செய்யும் சமயத்தில் யாரும் உடன் இருப்பதை இவர் விரும்புவதில்லை. அதனால் யாராலும் அந்த அறையில் இருக்க முடியவில்லை. இவர் மிகுந்த ஆசாரசீலராகவும் இருந்தார்.

தினமும் இருவேளை நீராடுவார். கங்கையில் நீராடியபின், கரையில் இருந்த வில்வமரத் தடியில் அமர்ந்து தியானம் செய்வார். மாலையில் ராதாகிருஷ்ணன் கோவில் பிராகாரத்தில் அமர்ந்து ஜபம் செய்வார்.

மாமரத்தின் அருகிலிருந்த இவருடைய சமையலறை இப்போது இடிந்துபோய்விட்டது. அங்கே தம் கையாலேயே சமைத்து வாழை யிலையில் வைத்துக் கோபாலனுக்கு முன்னால் ஒரு சிறிய மரக்கட்டையில் ஆசனம் அமைத்து, சிறிய பாத்திரத்தில் கங்கைநீர் வைத்துப் பகவானை ஆவாகனம் செய்து, பிரசாதத்தை நிவேதனம் செய்வார். அதன்பின் அந்தப் பிரசாதத்தை உண்பார்.

இவர் உருளைக்கிழங்குக் கறி, பயற்றம் பருப்புடன் கூடிய சோறு இவற்றையே பெரும் பாலும் உண்பார். இரவு ஆகாரமோ தோட்டத்துத் தேங்காயில் செய்த இனிப்பும் சிறிதளவு பாலுமே ஆகும்.

தோட்டத்திலுள்ள உலர்ந்த இலைச்சருகுகளையும் சிறு குச்சிகளையும் சேகரித்து உணவு சமைப்பார். கணவர் வீட்டிலிருந்து கிடைத்த சிறிய அளவு பூமி, ஸ்திரீதனம் முதலியவற்றை விற்றுக் கிடைத்த சுமார் எழுநூறு ரூபாயைத் தத்தரின் மனைவியினிடம் கொடுத்துக் கிடைத்த ஓரளவு வட்டியைக் கொண்டு தம் செலவுகளைச் சமாளிப்பார்.

ஆறு மாதத்திற்குத் தேவையான அரிசி, பருப்பு, மசாலா முதலியவற்றை மேஜைமீது சில பானைகளில் வைத்திருப்பார். இவற்றைக் காமார்ஹாடி தொழிற்சாலை செல்லும் வழியிலுள்ள வாராந்தரச் சந்தையில் வாங்குவார்.

முறங்கள், கல்லுரல் முதலியவை ஒரே அறையில் இருக்கும். ஒரு பையில் பொரி, சர்க்கரை, மிட்டாய், தேங்காய், லட்டு முதலியவற்றை வைத்திருப்பார். இன்னோர் இரும்புப் பெட்டியில் பழைய துணிமணிகளை வைத்திருப்பார். இவருக்குக் கடைசிவரை சில பற்கள் இருந்தன. சாம்பல், கரிப்பொடி, புகையிலை கலந்த பற்பொடியால் பல் துலக்குவார். உணவு உட்கொண்டபின் சிறிது ஓமம், தனியா முதலியவற்றை வாயில் போட்டுக்கொள்வார். தாம் வெற்றிலை போட்டுக்கொள்ளாவிட்டாலும், கோபாலனுக்கு நிவேதனம் செய்வார். அல்லது யாரேனும் நிர்ப்பந்தம் செய்தால் சிறிதளவு போட்டுக்கொள்வார்.

தத்தரின் மனைவியிடம் கொண்ட அன்பு காரணமாகவும், இயல்பான பக்தியின் உந்துதலாலும் ஸ்ரீராதாகிருஷ்ணரின் கோவிலில் சில வேலைகளைச் செய்வார். அத்துடன் நில்லாமல் தத்தரின் மனைவியுடன் சேர்ந்து நைவேத்தியத்திற்காகக் காய்கறி நறுக்குவார். மௌனமாகத் தனிமையில் வாழ்வதே இவரது வாழ்வின் போக்காக இருந்தது.

இரவு இரண்டு மணிக்கு எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, மூன்று மணி முதல் காலை எட்டு மணி வரையில் ஜபம் செய்வதில் மூழ்கியிருப்பார். பின்பு பூஜையறையைச் சுத்தம் செய்வது, பாத்திரம் தேய்ப்பது,

பூக்கொய்வது, மாலை தொடுப்பது, சந்தனம் அரைப்பது முதலியவற்றில் சிறிது நேரம் செல விடுவார். பூஜை முடிந்தபின் தாமே சமைத்த உணவை உட்கொண்டு பின் சற்று இளைப்பாறு வார். அதன்பின் மீண்டும் ஜபம் செய்யத் தொடங்குவார். மாலையில் கோவிலில் தீப ஆராதனை முடிந்தபிறகு மீண்டும் இந்தச் சாதனைகள் தொடரும்.

ஸ்ரீராமகிருஷ்ணருடன் சந்திப்பு ஏற்படுவ தற்கு முன்பு சுமார் இருபது வருஷகாலம், ஒரே ரீதியில் இத்தகைய சாதனை அந்தச் சிறிய அறை யில் சலனம் ஏதுமின்றி நடந்துகொண்டிருந் தது. ஒரு சமயம் மட்டும் இந்தச் சாதனையைச் சிறிது நிறுத்தி, தத்தரின் மனைவியுடன் ரெயி லில் காசி கயை மதுரை பிருந்தாவனம் பிர யாகை முதலிய பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வந்தார்.

இவருக்குப் படிக்கத் தெரியுமா என்பதற்குப் பதில் கூறுவது மிகவும் கடினம். ஆயினும் இவர் காமார்ஹாடியை விட்டுச் சென்றபின், இவரு டைய வீட்டிலிருந்து மூக்குக்கண்ணாடி, மஞ்சள் துணியில் சுற்றிய காசிவாசி மகாபாரதம், ஒரு ராமாயணம், ஒரு கீதைப் புஸ்தகம், ராம சந்திர தத்தர் அளித்த சங்கீதப் புத்தகம் முதலியன கிடைத்தன.

1884-ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் ஒரு நல்ல நாளில் அகோரமணிதேவிக்கு ஸ்ரீராம கிருஷ்ணரின் திவ்ய தரிசனம் கிடைத்தது. அப் போது ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயர் பலரிடையே பரவியிருந்தது.

தத்தரின் மனைவி ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றிக் கேள்வியுற்று மிகுந்த ஆவலுடன் அன்றே அவரைக் காணப் படகில் பயணம் செய்து தட்சிணேசுவரத்தை அடைந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களை ஆதரவுடன் வரவேற்றுத் தமது அறையில் உட்காரச் சொன்னார். பக்தி தத்துவத்தைப்பற்றிய அநேகக் கருத்துக்களை அவர்களுக்குச் சொன்னார். பஜனைகளைப் பாடி அவர்கள் கேட்டு ஆனந்திக்கச் செய்தார். மறுபடி வரும்படிக் கூறி விடை கொடுத்தார்.

தத்தரின் மனைவி ஸ்ரீராமகிருஷ்ணரைக் காமார்ஹாடியிலுள்ள தங்கள் வீட்டிற்கு வருகை தரும்படி அன்போடு அழைத்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு, அதன்படி ஒரு நாள் அங்கே சென்று விக்கிரகத்தின் ஜீவமயமான ஒளியின் முன்னால் ஆடினார், பாடினார்; பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு தட்சிணேசுவரம் திரும்பினார்.

இதற்கிடையில் அகோரமணியின் வாழ்க்கை யில் ஏற்படப்போகும் பெரும் மாற்றத்தின் முன்னோடியாக ஸ்ரீராமகிருஷ்ணரின் சந்திப்பு நடந்தது.

ஒரே சமயத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யை யாகவும் தாயாகவும் அகோரமணிதேவி விளங் கினார். அதுபற்றிய விவரங்களை அடுத்த இதழில் நாம் விளக்கமாகத் தெரிந்துகொள்வோம்.

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் (கவிதைகள் அனுப்ப வேண்டாம்), மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலிய எதையும் தபால்மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும் எழுத் தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ்நடையில் தெளிவாக எழுத வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத் திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள் போதிய தபால்தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

சென்னை — 600004

1981 ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீமத் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஜயந்தி விழா :

29—7—81 புதன்கிழமை ஜன்மதிதி : விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன (காலை 8 மணி முதல் 11 மணி வரை)

29—7—81-ஆம் நாள் மாலை வழிபாட்டிற்குப் பிறகு 'சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் வாழ்வு-வாக்கு'ப் பற்றி மடத்தைச் சேர்ந்த துறவியர் உரை நிகழ்த்துவார்கள்.

1—8—81 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணிவரை வாரியார்தாசன் அவர்கள் 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்ற தலைப்பில் ஹரிகதை காலட்சேபம் நிகழ்த்துவார்கள்.

2—8—81 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு சுவாமி ராமகிருஷ்ணானந்த ஜயந்தி பொதுக் கூட்டம்.

தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்
பேசுபவர் : இரா. ஸ்ரீநிவாசன்

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி :

23—8—81 ஞாயிற்றுக்கிழமை : கோகுலாஷ்டமி—விசேஷ பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

30—8—81 ஞாயிற்றுக்கிழமை : ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி பொதுக்கூட்டம் (மாலை 5-30 மணிக்கு)

தலைவர் : சுவாமி கபீரானந்தர்
பேசுபவர் : அலங்காரம் தேவராஜன்

மற்ற ஜயந்திகள் :

15—8—81	சனிக்கிழமை :	சுவாமி நிரஞ்ஜனானந்த ஜயந்தி
28—8—81	வெள்ளி :	சுவாமி அத்வைதானந்த ஜயந்தி
22—9—81	செவ்வாய் :	சுவாமி அபேதானந்த ஜயந்தி
28—9—81	திங்கள் :	சுவாமி அகண்டானந்த ஜயந்தி

விசேஷ தினங்கள் :

17—7—81	வெள்ளி :	குருபூர்ணிமா
2—9—81	புதன் :	விநாயக சதுர்த்தி

12, 27 ஜூலை & *11, 25* ஆகஸ்ட் & *10, 24* செப்டம்பர் ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

சத் சங்கம் : ஞாயிறுதோறும் (மாலை 4 மணி முதல் 5-30 வரை)

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (5, 29 ஜூலை & 9 ஆகஸ்ட் & 6, 20 செப்டம்பர்)

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (12, 26 ஜூலை & 16 ஆகஸ்ட் & 13, 27 செப்டம்பர்)

1. ஸ்ரீமத் பாகவதம்—திரு 'அண்ணா' (5 ஜூலை, 9 ஆகஸ்ட், 6 செப்டம்பர்)
2. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்நாமம்—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (12 ஜூலை, 16 ஆகஸ்ட், 13 செப்டம்பர்)
3. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள் (19 ஜூலை, 20 செப்டம்பர்)
4. விவேக சிந்தாமணி—திரு புலவர் நாகராயன் (26 ஜூலை, 27 செப்டம்பர்)

மாலை 5-35 முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் 'பக்தி ரத்னாவளி' என்ற தலைப்பில் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களிலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-45 மணிக்கு)

1.	திங்கள்	ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி அமிர்தானந்தர்
2.	செவ்வாய்	கர்மயோகம்—சுவாமி கபீரானந்தர்
3.	புதன்	பகவத்கீதை—பிரம்மசாரி சின்மய சைதன்யா
4.	வியாழன்	ஆன்மிக வாழ்க்கை—சுவாமி கமலாத்மானந்தர்
5.	வெள்ளி	விவேக சூடாமணி—'அண்ணா' சுப்ரமண்யம்
6.	சனி	(4 ஜூலை, 8 ஆகஸ்ட், 5 செப்டம்பர் மட்டும்) அத்யாத்ம ராமாயணம்—ஜஸ்டிஸ் பி. ராமகிருஷ்ணன், ஐ. சி. எஸ். (ரிடையர்டு)
7.	சனி	(11 ஜூலை, 22 ஆகஸ்ட், 19 செப்டம்பர் மட்டும்) ஸ்ரீ ஆஞ்சனேயர்—ஆர். கோதண்டராமன்

வேறு சில நிகழ்ச்சிகள் :

மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : 7, கெல்லீஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : 34/1, எண்ணூர் நெடுஞ்சாலை, சென்னை-19.

எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 4-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணமும் 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்ற தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார். இடம் : 18, 9-ஆவது லேன், சாஸ்திரி நகர், சென்னை.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்,
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
சென்னை - 600 004

தொலைபேசி
71231

காந்தியடிகளின் பொன்மொழிகள்



★ மனிதனுக்குப் பயப்படுவதை நிறுத்த வேண்டும்; கடவுளின் சத்தியத்தை மட்டும் நாட வேண்டும். இவை இரண்டையும் செய்தால் நாம் அனைவரும் கடவுளின் தூதர்களாக மாற முடியும் என்று நான் நம்புகிறேன். ஆன்மிக வாழ்க்கையின் முதல் தேவை பயமின்மைதான்.

★ கடவுளிடம் ஓரளவு நம்பிக்கை இருந்தாலும் நாம் அவரைக் காண முடியும். அவருடைய அன்பு நம்மைச் சுற்றி எல்லா இடத்திலும் பரவி இருப்பதையும் காண முடியும்.

★ தெய்வ சித்தத்தை ஒவ்வொரு மனிதனும் அறிந்துகொள்ள முடியாது. தெய்வ சித்தத்தை அறிவதற்கு வேண்டிய சக்தியைப் பெற தகுந்த பயிற்சி தேவை.

★ சூதறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற பொக்கிஷங்கள். அந்த பொக்கிஷங்கள் க்ஷண நேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கும், சுகபோகம் என்று தவறாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் இரையாகித் தேய்ந்து போய்விடக் கூடாது.

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர், துணை ஆசிரியர் : கமலாத்மானந்தர்.

பதிப்பாளர் : சுவாமி தன்மயானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.

அச்சிடுபவர் : கே. எல். செல்லப்பன், சுத்தானந்த அச்சகம், சென்னை-600 020.